
குங்குமச்
சிமிழ்
1-7-2009
விலை ரூ.4
தூண்டில்
சூரியன்
ஆர்னிகாநாசர்

# தூண்டில் சூரியன்

ஜாஸ்மின் டிடக்டிவ் ஏஜன்ஸி.

காலர் வைத்த டீசர்ட்டும் ஜீன்ஸும் அணிந்திருந்தான் டிடக்டிவ் நிலாமகன். முன்னுச்சி தலைகேசம் அரை வளையமாய் சுருண்டிருந்தது. மூக்கின் நுனியை நீவிக் கொண்டான்.

"குட்மார்னிங் பாஸ்!" என்றபடி உட்பட்டாள் மேகா. ஸ்லீவ்லெஸ் லோகட் ஜாக்கட்டும் குட்டைக் கவுனும் உடுத்தியிருந்தாள். ஹைஹீல்ஸ் டாக் டாக்க நடந்து வந்தாள்.

"மார்னிங் மேகா!"

தனது இரு மார்பகங்களையும் ஒரு மாதிரி புரஜக்ட் செய்து புட்டத்தை பின்னுக்கு தள்ளி "எப்டி இருக்கிறேன் பாஸ்?" என்றாள்.

"நேற்றைக்கு போல இன்றைக்கும்!"

"நயன்தாராவோட தங்கச்சிய பாத்தமாதிரி இல்ல நான்?"

"நயன்தாராவே எனக்கு பிடிக்காது!"

"சோனியா அகர்வால் தானே உனக்கு பிடிக்கும்?... அழுத மூஞ்சி இளம் தொப்பை– வாத்து நடை இவைதானே சோனியா அகர்வாலோட சிறப்பு அம்சங்கள்?"

"சோனியா அகவர்வால் முந்தி பிடிச்சது... இப்ப இல்ல..."

## ஆர்னிகா நாசர்

“அப்டின்னா தீபிகா படுகோனேவுக்கு தாவிட்டியா?”

“முந்தி பிடிச்சது... இப்ப இல்ல...”

“என்ன ஆளு நீ... சென்செக்ஸ் நிலவரம் மாதிரி ப்ரிக்குவன்ட்டா மாறிக்கிட்டே இருக்க?”

“சித்திரம் பேசுதடியில பாவனாவை பிடிச்சது. ஜெயங்கொண்டானில் பிடிக்கவில்லை!”

“அப்டின்னா இந்த நொடில உனக்கு யாரைப் பிடிக்கும்?”

“டைட்டானிக் ஹீரோயின் கேட்டி வின்ஸ்லெட் அப்ப பிடிக்கல... இப்ப பிடிக்கிறது. சமீபத்தில் Reader படத்திலும் Revolutionary Road படத்திலும் பிரமாதப்படுத்தியிருப்பா. எனக்கு அறிவு சார்ந்த பெண்களே பிடிக்கும்!”

“உனக்கு ஹீரோக்கள்ல யாரைப் பிடிக்கும்?”

“நான் கடவுள் பார்த்தபிறகு ஆர்யா. வெண்ணிலா கபடிக்குழு ஹீரோ பிடிக்கும். ஜெயங்கொண்டான் வில்லன் கிஷோர் பிடிக்கும்.”

“ஹீரோ மனோஜ்குமார் பிடிக்குமா?”

“மனோஜ்குமாரை பற்றி என்னிடம் எந்த அபிப்ராயமும் கிடையாது. அவரை நான் வெறுக்கவும் இல்லை; விரும்பவும் இல்லை. ஏன் கேட்கிறாய்?”

இன்டர்காம் அழைத்தது.

ஒலி வாங்கியை கையில் எடுத்து நிலா, “சொல்!”

“சார்! உங்களைப் பார்க்க சினிமா நடிகர் மனோஜ்குமார் வந்திருக்கார்!”

“என்ன விஷயமாம்?”

“பெர்ஸனல் என்கிறார்!”

“உள்ளே அனுப்பு!”

கதவைத் திறந்து கொண்டு மனோஜ்குமார் உட்பட்டான். அவன் அடித்திருந்த அரை லிட்டர் செண்ட் அறையைக் கலங்கடித்தது.

“ஹாய் டிடக்டிவ் நிலாமகன்! ஹௌ ஆர் யூ?”

“ஹாய்... நான் நலமா இருக்கிறேன்... உக்காருங்க!”

“இது உங்க அஸிஸ்டெண்ட் மேகாதானே?” கை குலுக்கப்

போனான் மனோஜ் குமார். மேகா கைகளை உள்ளிழுத்துக் கொண்டு வணங்கினாள்.

மனோஜ்குமார் தமிழின் டாப் டென் ஹீரோக்களில் ஒருவன். தயாரிப்பாளராக இருந்து, வில்லனாக அறிமுகமாகி, கதாநாயகனாக மாறியவன். வயது 55. ஸிக்ஸ் பேக் உடம்புக்கு சொந்தக்காரன். உடம்பு என்னதான் அழகாக இருந்தாலும் முகம் சார்லஸ் பிரான்ஸன் போல் கரடு முரடாய் இருந்தது.

"நிலாமகன்! நான் ஒரு பிரச்சனைல சிக்கியிருக்கேன். நீங்கதான் என்னை காப்பாத்தனும்!"

"சினிமால ஆயிரம் பேரைக் காப்பாத்தும் உங்களை நானொருத்தன் காப்பத்தனுமா?"

"சினிமா வேறு, வாழ்க்கை வேறுன்னு தமிழ்நாட்டு மக்களுக்குதான் தெரியாது. எனக்கு தெரியும்!"

"சரி, உங்க பிரச்சனையை சொல்லுங்க!"

"கடந்த ஒரு வருடமாகவே ஒரு மிஸ்டர் எக்ஸ் உயிர்தொந்தரவுகளை பரிசளித்து வருகிறான்!"

"எப்படி?"

"என் புதுப்படம் ஒண்ணு ரிலீஸ் ஆச்சுன்னா மொதல் ஷோவுக்கு பிறகு படத்தை தரக்குறைவா அருவெறுப்பா விவரித்து தமிழ்நாட்டு மக்கள் அய்யாயிரம் பேருக்கு எஸ்எம்எஸ் அனுப்புகிறான் மிஸ்டர் எக்ஸ்!"

"அவன் அனுப்ச்ச எஸ்.எம்.எஸ்களில் எதாவது ஒன்றை உங்க இன்பாக்ஸ்ல சேவ் பண்ணி வைச்சிருக்கீங்களா?"

"ஆம்!"

"அந்த எஸ்.எம்.எஸ்களை என்னுடைய கைபேசிக்கு குடியேற்றுங்கள்!" தனது எண்ணைக் கூறினான் நிலா.

தனது கைபேசிக்கு மாறின குறும்செய்திகளை வாசித்தான் நிலா.

**தாய்:** மகனே... நீ ஒழுங்கா சாப்பிடல... உன்னை மனோஜ்குமார் நடிச்ச 'உசிலம்பட்டி' படத்துக்கு கூட்டிட்டு போய்ருவேன்!

**மகன்:** அய்யய்யோ. சாப்பாட்டைக் குடு... ஒரு பருக்கை மிச்சமில்லாம சாப்ட்டுர்ரேன்!

**ஒருவன் :** மனோஜ்குமார் எந்த மாதிரி ரோல்ல நடிச்சா படம்

37 வயதான ஹாலிவுட் நடிகை கிஸ்டினா அப்பிளிகேட் 'Samantha who' என்ற படத்தில் நடித்தவர். இவரைக் கடந்த ஆண்டு பிரபல இதழ் ஒன்று உலக அழகியாகத் தேர்ந்தெடுத்தது. கடந்த ஆண்டு மார்ச்சில் இவருக்கு மார்பகப் புற்றநோய் அறிகுறி தெரிந்தது. ஜூலையில் சிகிச்சை செய்ய ஆரம்பித்து நவம்பரில் அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இவர் இப்போது மார்பக புற்றுநோய் பாதிக்கப்பட்வர்களுக்கு இலவசமாக எம்ஆர்ஜ ஸ்கேன் எடுக்கும் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

- க.ரவீந்திரன்



பிச்சிக்கிட்டு ஓடும்?

**இன்னொருவன்:** திருநங்கையா நடிச்சா... நடிக்க வேணாம் அப்படியே வந்து போனா போதும்.

ஆபரேட்டர் மனைவி: ஏங்க உங்க மூஞ்சி பேயறைஞ்ச மாதிரி இருக்கு?

**ஆபரேட்டர்** : இன்னைக்கி மனோஜ்குமார் படத்தை ப்ரஜக்ட் பண்ணினேன்... அதுதான்...

– நிலா நிமிர்ந்தான். "வேற என்ன மாதிரியான தொந்தரிவுகள் அந்த எக்ஸ் தருகிறான்?"



"தியேட்டர்களில் காசுக்கு ஆள் பிடித்து படத்தை பத்தி படுமட்டமாக கத்தச் சொல்றான்... கத்ர ஆள்களை பிடிச்சு விசாரிச்சா கத்தச் சொல்ற ஆளை நேரா பாத்த தில்லன்னு சொல்றாங்க!"

"இம்... வேற?"

"எனது தபால் முகவரிக்கும் மின்னஞ்சல் முகவரிக்கும் தினசரி நூறு வசவு கடிதங்களாவது வருகின்றன!"

“தபாலில் வரும் கடிதங்கள் கையால் எழுதப்பட்டவையா?”

“இல்லை... பத்திரிகை எழுத்துக்களை வெட்டி ஒட்டியிருக்கிறான்!”

“வேற?”

“என்னுடைய நடிக்கும் ஹீரோயின்களிடம் என்னைப் பற்றி அவதூறாய் தகவல் தெரிவித்து அவர்களை விரட்டுகிறான்!”

“என்ன மாதிரியான அவதூறுகள்?”

“மனோஜ்குமார் ஆபத்தானவன் நடிகைகளை அறிமுகப்படுத்தற மாதிரி படுத்தி தன்னோட கஸ்டடில ரெண்டு மூணு வருஷம் வச்சுக்குவான்... அவங்களோட சம்பளத்தை பிடுங்கிடுவான்.. அப்டி இப்டின்னு!”

“வேற?”

“இது போல நூறு இடையூறுகள்!”

“இதெல்லாம் யார் செய்யறதா சந்தேகப்படுறீங்க?”

“எனக்கு எதிரிகள் அதிகம். யாரைப் பார்த்தாலும் எனக்கு சந்தேகமா இருக்கு. ஒரு எதிரி செய்றானா அல்லது நாலஞ்சு எதிரிகள் சேர்ந்து பண்றாங்களான்னு தெரியல. என்னை சதா சித்திரவதை செய்யும் அந்த கேடுகெட்டவனை நீங்கதான் பிடிக்கனும்.”

“பிடிச்சிரலாம்!”

மனோஜ்குமார் அழுதான். கண்களில் கிளிசரின் இல்லாமல் கண்ணீர் பொங்கியது. நிலாவின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான். “இப்பத்தான் என் மனசு ஓரளவு நிம்மதியாச்சு. காரியத்தை முடிச்சுக் குடுங்க அம்பது இலட்சம் பீஸ் தரேன்”

“இதுவரைக்கும் போலீஸுக்கு போகலையா நீங்க?”

“போகல”

“ஏன்?”

“கேஸை வச்ச ஸ்டேஷனே பணக்காரனாகிவிடும். விஷயத்தை பப்ளிக் பண்ணி என் பெயரை நாறடிச்சிருவாங்க. நீங்க ரகசியமா டீல் பண்ணி காரியத்தை முடிங்க!”

“ரைட்டோ!”

மனோஜ்குமார் மேகா பக்கம் திரும்பினான். “யு ஆர் ஸோ க்யூட் லைக் லேகா வாஷிங்டன். வரீங்களா என் புதுப்படத்ல ஹீரோயினா நடிக்க...

ஒன் இயர் அக்ரிமெண்ட் போட்டுக்கலாம்!"

"நான் வரல தாத்தா!"

"தாத்தாவா?"

"உங்க வயசுதான் எங்க தாத்தாவுக்கும். அதனால அப்படி அழைத்தேன்!"

"என்னையே தாத்தான்னா இன்னும் ஹீரோவா நடிக்கும் தேவ் ஆனந்த்தை என்னன்னு கூப்பிடுவ?"

"கொள்ளு தாத்தா!"

"தாத்தாவின் புஜபல பராக்கிரமம் உனக்கு தெரியாது!"

"உங்க வீரப் பிரதாபம் எங்களுக்கு எதுக்கு? கேஸை கவனியுங்க மேக்ரோ ஸ்டார்!" மேகா.

அசடு வழிந்தான் மனோஜ்குமார். நிலா ஒரு விண்ணப்பத்தை நீட்டினான். "இதில் கேட்கப்படும் அனைத்து விபரங்களையும் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். உங்களின் இயற்பெயரை– உங்களின் உண்மையான பிறந்த தேதியை– உங்களின் முதல் திருமணத்தை இப்படி எதனையும் மறைக்காமல் தெரிவியுங்கள். நீங்க தரும் தகவல்களை ரகசியம் காப்போம்!"

"எனக்கு சரிவர எழுதத் தெரியாது. நான் ஒரு டென்த் பெயில். என்னை எப்படியோ மக்கள் மேக்ரோ ஸ்டார் ஆக்கிட்டாங்க!"

"உங்க இயற்பெயர் என்ன?"

"மார்த்தாண்டன்!"

"சொந்த ஊர்?"

"தென்காசிக்கு அருகில் இருக்கும் புளியங்குடி!"

"உங்க பிறந்த தேதி?"

"10.07.1954!"

"உங்க முதல் திருமணம் எப்ப நடந்தது?"

"சினிமாவுக்கு வருவதற்கு முன் 1973ல் நடந்தது. மனைவி உறவுக்காரப் பெண். இரு குழந்தைகள். எரிசாராயம் கடத்தி கடத்தி ஓரளவு பணம் சேர்த்தேன். அப்பணத்தை வைத்து சிலபல கறுப்பு தொழில்கள் சென்னையில் செய்தேன். சேர்ந்த பணத்தை வைத்து ஒரு படம் எடுத்து தோற்றேன். ஹீரோயினாக நடித்தவளை சின்ன வீடாக்கிக் கொண்டு

அவளின் பணத்தை கபளீகரம் செய்தேன். முதல் மனைவிக்கு பணம் கொடுத்து 1978ல் டைவர்ஸ் செய்துவிட்டேன். 2005ல் நான் செய்தது எனக்கு நான்காவது திருமணம்!"

எல்லா தகவல்களையும் குறித்துக் கொண்டான் நிலாமகன்.

"தகவல்கள் போதுமா நிலாமகன்?"

இருவரும் அந்தரங்க தொலைபேசி எண்களை பரிமாறிக் கொண்டனர். நிலா எழுந்தான். "நீங்க கிளம்புங்க மிஸ்டர் மனோஜ்குமார்!"

எழுந்த மனோஜ்குமார் மேகாவை ஏக்கமாக வெறித்தான். 'எவனுக்கு சாப்பிடக்குடுத்து வைச்சிருக்கோ? கட்னா இவளைக் கட்டனும்-இல்ல-இவளை கட்னவன் காலை தொட்டுக் கும்பிடனும்!'

**முரண்**

**விற்கப்படும் ஐசோ**
**குளிர்சாதனப் பெட்டியில்**
**விற்பவனின்**
**வாழ்வோ**
**சுட்டெரிக்கும் வெயிலில்.**
**- செல்வராஜா, சேலம்**

மாதிரியான சபலக்கிழவன்களை நாசமா போங்கடான்னுவிட்ரனும்-காப்பாத்தக்கூடாது!"

"டிடக்டிவ்களின் வேலை துப்பறிவதே. வி ஆர் நாட் மாரல் போலீஸ்!" என்றான் நிலாமகன்.

**2**

நடிகர் மனோஜ்குமாரின் பங்களா.

"புறப்படுகிறேன் பாப்பா... சினிமா ஆபரை திரும்ப யோசிச்சு வை பாப்பா... நூறு நூறா சம்பாதிக்கிறதை விட கோடிக் கணக்குல அள்ளிரலாம் அள்ளி. ஓவர் நைட்ல கனவுக்கன்னி ஆய்டலாம். விடலைப் பசங்க உனக்கு கோயில் கட்னாலும் கட்டுவான்க"

"நோ கான்வாஸிங் ப்ளீஸ்!" வாசலை கட்டிக் காட்டினாள் மேகா.

மேகா நெட்டுயிர்த்தாள். "இது

இரவாடை அணிந்த மனோஜ்குமார் மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தான். இரவு போதையின் மிச்சம் ஹேங் ஓவராக மனோஜ்குமாரின் தலையில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

வரவேற்பறையில் மேனேஜர் பாச்சா நின்று கொண்டிருந்தான். மனோஜ்குமாரை பார்த்ததும் "குட்மார்னிங் தலைவா!"

"குட்மார்னிங் கிடக்கட்டும்... ஏய்யா காள்காள்லுன்னு கத்திக்கிட்ருக்க?"

"உங்களது நான்கு கம்ப்யூட்டர்களிலும் எனது ஒரு கம்ப்யூட்டரிலும் இருந்த ஒட்டுமொத்த டேட்டாக்களை யாரோ அழித்துவிட்டார்கள். வங்கிக் கணக்கு– பினாமி சொத்து விபரம் – கால்ஷீட் தகவல்கள் இப்படி எல்லாமே போயிருச்சு!"

மனோஜ்குமார் முகத்தில் அறைந்து கொண்டான். "அடகடவுளே! டிடக்டிவ் நிலாமகன் எதையும் துப்பறிஞ்சு கண்டுபிடிக்கறதுக்குள்ள நான் நிர்மூலம் ஆகி விடுவேன் போல!"

"எக்ஸ்க்யூஸ் மீ!" என்றபடி காட்சியமைப்புக்குள் பிரவேசித்தான் நிலாமகன். உடன் மேகா.

"ஸிஸ்டம் அனலிஸ்ட் வைத்து கம்ப்யூட்டரின் டேட்டா அழிந்தது எப்படி என்று கண்டுபிடித்து விடலாம்!" பாச்சாவிடம் திரும்பினான் நிலா.

"நீங்கள் தானே மனோஜ்குமாரின் மேனேஜர்?"

"ஆமா சார்! ஆல் இன் ஆல் அழகுராஜா நான்தான்!"

"உங்க முழுப்பெயர் என்ன?"

"பாலச்சந்திரன் – சுருக்கமா – செல்லமா – பாச்சா!"

"சொந்த ஊர்?"

"செஞ்சி!"

"சினிமாத்துறைக்கு வந்து எத்னி வருஷமாகுது?"

"இருபத்தியெட்டு வருஷமாகுது. நடிக்கனும்னு ஓடி வந்தேன். எடுபிடியா இருந்திருக்கேன். மேக்கப் அஸிஸ்டென்டா இருந்திருக்கேன். புரடக்ஷன் பாயாக் கூட இருந்திருக்கேன். கடந்த பத்து வருஷமா மானேஜர்!"

"மனோஜ்குமாரிடம் வந்து எத்னி வருஷமாகுது?"

"நாலு வருஷமாகுது!"

"அதுக்கு முன்னாடி யார்கிட்ட இருந்தீங்க?"

"அதுக்கு முன்னாடி நாலு முன்னணி ஹீரோக்களுக்கு ரெண்டு முன்னணி காமெடியன்களுக்கு மேனேஜரா இருந்திருக்கேன். இது என்ன கவர்மென்ட் உத்தியோகமா? நிலையா உக்காந்து சேரை தேய்க்க. சினிமா சார். உங்கம்மா இல்லை எங்கம்மா இல்லை சினிமா!"

"மனோஜ்குமாரிடம் எப்டி வந்தீர்கள்?"

“அவர் கூப்பிட்டு வந்தேன்”

“அவரிடம் மட்டும் எப்படி நாலு வருஷமா தாக்கு பிடிக்றீங்க?”

“கஷ்டம்தான். எங்கக்குள்ள வாரத்துக்கு ரெண்டு சண்டையாவது வந்திடும். போடா நீயுமாச்சு உன் வேலையுமாச்சுன்னு தூக்கிப்போட்டுட்டு போயிருவேன். மறுநா என் வீட்டுக்கு வந்து கெஞ்சிக் கூத்தாடி திரும்ப கூட்டிட்டு போயிருவார். மனோஜ்குமாருக்கு கதை கேட்கத் தெரியாது. அவர் சார்பா நான் கேப்பது உண்டு. பேமென்ட் பாக்கிகளை வசூலிக்க என்னைதான் அனுப்புவார். என் சினிமா ஆசை அறிந்து அவரது படங்களில் எனக்கு சின்னசின்ன ரோல்களை கொடுப்பார். மனோஜ்குமார் ஒரு முரட்டுக் குழந்தை மாதிரி. எப்ப குழந்தை கடிச்சு வைக்கும், எப்ப சாக்லேட் குடுக்கும்னு தெரியாது!”

மேனேஜர் பய்யன் நம்மை திட்டுகிறானா பாராட்டுகிறானா என புரியாமல் முழித்தான் மனோஜ். “ஏன் கண்டதையும் பேசற பாச்சா? மொத்தத்ல பாச்சா எனக்கு அஞ்சாவது பொண்டாட்டி மாதிரி நிலா”

பாச்சாவையும் மனோஜையும் அசூயையாக பார்த்தான் நிலா.

“பாச்சா! மனோஜ்க்கு எதிராக நடக்கும் குழப்படிகளுக்கு யார் காரணகர்த்தா என்று உங்களுக்கு யூகிக்கத் தெரியாதா?”

“என்னால யூகிக்க முடியல. மனோஜுடன் சேர்ந்து முழுசா ஒரு படம் பண்ணிய டைரக்டரெல்லாம் மனோஜ்க்கு எதிரிகள்தான். மனோஜுடன் புகைப்படம் எடுக்க விரும்பி 500 கிலோமீட்டர் பயணித்து வந்து – மனோஜின் ஆபாச அர்ச்சனைகளை கேட்டு, வந்த வழியே திரும்பி ஓடிய அனைத்து ரசிகர்களும் எதிரிகள்தான். மனோஜின் படங்கள் நூறு நாட்கள் ஓடி பெரிய வெற்றி பெறுவதில்லை. ஆனால் நான்கு வாரங்கள் ஓடி முதலுக்கு மோசமில்லாமல் தப்பித்து விடுகின்றன. கிராமங்களில் விஜய்காந்த்துக்கு அடுத்த மினிமம் காரன்டி மனோஜுக்குதான்!”

“மனோஜ்குமாரின் நாலாவது மனைவி இந்த பங்களாவில் இல்லையா?”

“மனோஜின் நாலாவது மனைவி சோபியா சாலிகிராமம் பங்களாவில் இருக்கிறார். அவருக்கு இவர் மூன்றாவது. இருவரும் வாரத்துக்கு ஒருநாள் சந்தித்துக் கொள்வதே அபூர்வம்!”

“இந்த ஜோடிக்கு குழந்தைகள்?”

“ஒரே ஒரு பய்யன். பெயர் மார்லன் பிரண்டோ வயது நாலு!”

“அதென்ன பெயர் ஹாலிவுட் தனமாய்?”

“ஹாலிவுட்டின் ஸிக்ஸ் பேக் கதாநாயகர்கள் அனைவரையும் மனோஜ்க்கு பிடிக்கும். அதனால!”

“பாச்சா! நான் ஒரு கேள்வி கேட்பேன். நீங்க வருத்தப்படக் கூடாது!”

“கேளுங்க!”

“உங்களுக்கும் மனோஜ்க்கும் பலவிதங்களில் மனஸ்தாபம். உங்களின் பல படவாய்ப்புகளை மனோஜ் கெடுத்திருக்கிறார். மனோஜின் ஒரு படத்தில் ஒரு ரன்னிங் கேரக்டர் பண்ண வாய்ப்பு வந்தது. அதையும் மனோஜ் கெடுத்து விட்டார். அவரின் கால்ஷீட்களை நீங்க திருட்டுத்தனமாய் விற்கிறீர்கள் என்கிற கோபமும் அவருக்கு உங்க மேல் உண்டு. மனோஜை வைத்து சொந்தப் படம் எடுக்க கால்ஷீட் கேட்டீர்கள். மனோஜ் மறுத்துவிட்டார். இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு நீங்கதான் மனோஜ்க்கு எதிரான குழப்படிகளை செய்து வருகிறீர்கள் என குற்றஞ்சாட்டுகிறேன் பாச்சா!”

ஒரு நொடி நிலாவை வெறித்து விட்டு பின் சிரித்தான் பாச்சா. “சினிமாவுக்கு வந்த கொஞ்ச நாளைலயே எனக்கு சூடுசொரணை அத்துப்போச்சு. நான் பழி வாங்கனும்னா ஆயிரம் சினிமாக்காரன்களை பழி வாங்கனும் முடியுமா? தவிர மனோஜ் அரசியலில் ஈடுபட்டு பெரிய ஆளா வருவார்னு நம்புறேன். அவர் சி.எம்.மானா நான்தானே எப்எம்?”

“பாச்சா... இந்த பங்களாவில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களின் விபரங்கள் தேவை!”

“தருகிறேன்!”

“பாச்சாவின் முதல் மூன்று மனைவிமார்கள் குடும்பம் பற்றியும் சோபியாவின் முதல் இரண்டு கணவன்மார்கள் குடும்பம் பற்றியும் எனக்கு தகவல்கள் தேவை!”

பாச்சா மனோஜைப் பார்க்க மானோஜ் ‘குடு’ என சமிக்ஞை காட்டினான்.

“சரி. குடுக்றேன்!”


“பாச்சா! உங்களுக்கு ஒரு குட்டி பரிட்சை!”

“என்ன?”

“மனோஜின் டாப்டென் எதிரிகள் யார்யாராய் இருப்பர் என யூகித்து ஒரு பட்டியல் குடுங்கள். அதில் உங்க யூகத் திறமையை காட்டுங்கள்!”

குடும்ப வன்முறைக்கு எதிரான ஒரு பிரச்சாரப் படத்தில் ஹாலிவுட் நடிகை கெய்ரா நைட்லீ நடித்தார். இப்படம் மிகவும் வன்முறையைச் சித்தரிக்கிறது என தடைவிதிக்கப்பட்டுள்ளது. நடிகையை சந்தேகப்படும் அவள் காதலன் அவளை அடிப்பது போன்ற காட்சிகள் படத்தில் இடம் பெற்றுள்ளதாம்.

**- க.ரவீந்திரன்**



"என்னை வம்புல மாட்டி விடப் பாக்றீங்க நிலா"

"நோ நோ. பல கோணங்களில் ஆராயும் போது உங்களது கோணமும் எனக்கு உதவும்!"

"பட்டியலை எழுதித் தரமாட்டேன். வாயால் சொல்லுவேன்!"

"சரி சொல்லுங்க!"

பாச்சா சொல்லச் சொல்ல மனதிற்குள் ஏற்றிக் கொண்டான் நிலா.

"மனோஜ்க்க ரசிகர் மன்றங்கள் உண்டா?"

"என்ன கேள்வி கேக்றீங்க, டிஸ்யூம் படத்ல நடிச்ச பக்ரு வுக்கே நூறுமன்றம் இருக்கும் போது மனோஜ்க்கு இருக்காதா? தமிழ்நாட்டில் மனோஜ் பெயரில் பதிவு செய்யப்பட்ட மன்றங்கள் 26406. தலைமை மன்றம் சென்னையில். மன்றவேலைகளை கவனிப்பதும் நான்தான். மன்றத்துக்கு கொடி கூட டிஸைன் பண்ணிக் கொடுத்துள்ளோம். பின்னாளில் அரசியல் கட்சி தொடங்கினால் உதவும் பாருங்க!"

"ரசிகர்கள் என்ன நம்பிக்கைல மன்றம் நடத்றாங்க?"

"ரசிகர்கள் ஒண்ணும் முட்டாள் இல்லை. பத்து வருஷம் ரசிகனாகப் பாடுபட்டால் அமைச்சராகி விடலாம்னு நம்புறாங்க. அரசியல்–ஆன்மீகம்–சினிமாலதான் உழைப்பு ஒன்று–லட்சமாகிறது.

"ஓகே! பங்களாவை சுற்றி பார்க்க விரும்புகிறோம்!" நிலா சமிக்ஞை காட்ட மேகா தனது விடியோ கேமிராவை இயக்கினாள். பங்களாவின் உள்ளும்

புறமும் அலசியெடுத்தாள். ஆண் பெண் ஊழியர்களின் குளோஸப்களை பதிவு செய்தாள்.

வந்தவேலை முடிந்து நிலாவும் மேகாவும் புறப்பட்டனர்.

லீ ராயல் மெரிடியன்.

வெளிச்சம் ரேஷன் செய்யப்பட்ட அறை.

பாச்சா ஒரு மேஜை நோக்கி நடந்தான். சுற்றும் முற்றும் பார்த்தவாறே அமர்ந்தான்.

அனைத்து மேஜைகளும் நிரம்பியிருந்தன. மெல்லிய இசை வழிந்த கொண்டிருந்தது.

தனது கைபேசியை ஆப் செய்தான் பாச்சா. பாச்சா குடிப்பது ஒரு சடங்கு போல நிறைவேறும். சிறிதுசிறிதாக குடிப்பான். ஆனால் குடித்து முடித்து எழ மூன்று மணி நேரமாகும்.

பார் அட்டன்டர் பாச்சா நோக்கி வந்தான். "வணக்கம்!"

"வணக்கம்... எப்படியிருக்க?"

"உங்க புண்ணியத்ல நல்லாயிருக்கேன். எனக்கு ஒரு சினிமா சான்ஸ் வாங்கி தரமாட்டீங்களா?"

"நேரம் வரும். காத்திரு மகனே!"

"தலைவர் எப்டியிருக்கார்?"

"எந்த தலைவரை கேக்ற?"

"மேக்ரோ ஸ்டார் மனோஜ்குமார்!"

"அவர் உனக்கும்தான் தலைவர்–நான் அவருக்கு வொர்க்கிங் பார்ட்னர்!"

"உங்க பார்ட்னர் எப்டியிருக்கார்?"

"அந்தாளு நிலைமையே சரியில்லைப்பா. எந்தநேரம் கவிழ்ந்து போவாரோன்னு பயமாயிருக்கு!"

"ஏன்?"

"எல்லார் வயிற்தெரிச்சலையும் கொட்டிக்கிட்டா.. அப்டித்தான்!"

"நீங்க அவரை திருத்தக் கூடாதா?"

“இந்தக் காலத்ல யாரும் யாரையும் திருத்த முடியாது. அவனவன் அவனவன் வழில போய்ட்டே இருக்க வேண்டியதுதான்!”

“நீங்க யார்கிட்ட மேனேஜராயிருந்தாலும் அமோகமா இருப்பீங்க!”

“நெஞ்சை நக்காதே!”

“அட... உண்மையைச் சொன்னேன்!”

“வந்த வேலையைப் பாக்றேன்... நம்ம சரக்கை எடுத்திட்டு வா!”

“சரி!”

பார் அட்டன்டர் கிளம்பிப் போனான். குறிப்பிட்ட மேஜையிலிருந்து நால்வர் எழுந்து “ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆப் தி டே!” என கோஷமிட்டனர்.

பார் மேனேஜர் பாச்சாவிடம் வந்தார்.

“வழக்கமாக பாருக்கு வரும் ஒரு மில்லியனருக்கு இன்று பிறந்தநாள். ஆகவே இன்று பாரில் குடிக்கும் அனைவருக்கும் அவரது செலவில் மதுபானம் வழங்கப்படுகிறது!”

“யாரந்த மில்லியனர்? ஸ்லம் டாக் மில்லியனரா?”

“அவர் தனது பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை!”

“பைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு குடிக்க வரும் நாங்கல்லாம் என்ன பிச்சைக்காரங்களா? எங்களுக்கு எவனும் ஸ்பான்ஸர் பண்ண? எச்சிக்குடி எனக்கு பிடிக்காதுப்பா!”

“நெகடிவ்வா ஏன் ஃபீல் பண்றீங்க? இது ஒரு அன்பின் வெளிப்பாடு. நாளைக்கு உங்க பிறந்தநாள் வந்தா பார் மக்கள் அனைவருக்கும் லிக்கர் ஸ்பான்ஸர் பண்ணுங்க. தட்ஸ் ம்யூச்சுவல் பாஸ். ஒய் ஆர் யூ அன்நெசரலி டென்ஸ்டு? பி ரிலாக்ஸ்டு”

“அப்டின்ற? சரி... என்ன ட்ரிங்ஸ் ஆபர் பண்றீங்க?”

“எனி ட்ரிங்– பாட்டில் பத்தாயிரம் விலையுள்ள லெபனான் ரெட் ஒயின் பாட்டில் இருக்கு. டேஸ்ட் பண்றீங்களா?”

“ஒய் நாட்!”

ரெட் ஒயின் வந்தது. பைன் ஆப்பிள் சீஸ் ஸ்டிக் கடித்துக் கொண்டே ஒயின் சூப்பினான் பாச்சா.

லிக்கர் டிஸ்பிளே ஷோகேஸ்க்கு அருகே அந்த உருவம் ஒளிந்திருந்தது. பாச்சா ஒயின் சூப்புவதை ரசித்தது.

## உயிர்

எனக்காக
உயிர் கொடுப்பேன்
என்று... சொன்னது
எனது வயிற்றில்
உயிர் கொடுத்துவிட்டுப்
போகத்தானோ?
- செல்வராஜா, சேலம்

கையில் உருவம் சிறுகண்ணாடி குப்பி வைத்திருந்தது.

நான்காவது லார்ஜ் சாப்பிட்டதும் பாச்சாவுக்கு உற்சாகம் கரைபுரண்டோடியது. "கைய்ஸ்! என்னை நல்லா பாத்துக்கங்க. இன்னைக்கி நான் சாதாரண பாச்சா. நாளைக்கி நான் ஏ.எம். ரத்னம் பிரமீட் நடராஜன் மாதிரி. நானும் ஒரு மெஹா பட்ஜெட் புரடியூஸராவேன். எந்திரன் மாதிரி பத்து படம் எடுப்பேன். என் படத்துக்கு ஒரே வருஷத்ல 15 ஆஸ்கர் கிடைக்கும்."

மாதிரி. டோண்ட் மிஸ் இட்!"

"சரி கொண்டா!"

சிவப்பு ஒயின் நிரம்பிய கோப்பை மேஜைக்கு வந்தது. 'குடிக்காதே' என உள்ளுணர்வு பாச்சாவை எச்சரித்தது. பாச்சா கோப்பையை எடுத்து வாய்க்குள் கவிழ்த்தான்.

சில நொடிகளில் கண்கள் பிதுங்க வாயிலும் மூக்கிலும் இரத்தம் கசிய மேஜையில் பிணமாக தொமீரினான் பாச்சா. உருவம் நழுவியது.

3

கறுப்பு டீசர்ட்டும் கறுப்பு ஜீன்ஸும் உடுத்திய நிலாமகன் காரை செலுத்திக் கொண்டிருந்தான். செலுத்தலுக்கு இடையே அவனது இடது கை அவனது மூக்கை நீள்வாக்கில் நீவிவிட்டுக் கொண்டது.

யாரும் பாச்சாவின் சுயதம் பட்டத்தை கேட்கும் நிலையில் இல்லை.

பாக்கி இருக்கும் சிவப்பு ஒயினில் குப்பியிலிருக்கும் தூளை கலந்தது உருவம். பாட்டிலை குலுக்கி வைத்தது.

பார் அட்டன்டர், "ஒன் மோர் ரவுண்ட் சார்!"

"வேண்டாம்ய்யா!"

"கடைசி ரவுண்ட் ஹனி டியூ

"நிலா! நீ ஸ்லம்டாக் மில்லியனர் டேவ் பட்டேல் மாதிரி இருக்க..."

"ஆரம்பிச்சிட்டியா?"

"சிறுசிறு விஷயத்துக்கும் உனது முகம் பதட்டப்படுகிறது. பதட்டத்தின் விளைவாய் உனது முகத்தில் திவலை திவலையாய் வியர்வை பூக்கிறது. ஒரு சர்க்கஸ் சார்ந்த உடலுறவுக்கு பின் ஆண் எப்படி இருப்பானோ அப்டி இருக்கிறாய்!"

"அதிகம் பேசுகிறாய்!"

“சரி, சினிமா சார்ந்த ஒரு விஷயம் சொல்கிறேன். ஜோதிகாவுக்கு படத்தயாரிப்பாளர்கள் மொத்தம் 49 கோடி ரூபாய் கடன் பாக்கி தர வேண்டியிருக்கிறதாம். ஜோவின் கணவர் சூர்யா பிலிம் சேம்பரில் முறையிடுவார் என எதிர்பார்த்தால் சூர்யா பெருந்தன்மையாய் கடனை வஜா பண்ணிவிட்டாராம்!”

“தயாரிப்பாளர்கள் பேசிய பணத்தை ஜோவுக்கு தரவில்லையா, அல்லது அவர்கள் செக் பௌன்ஸ் ஆச்சா?”

“இல்ல இது வேற மாதிரி!”

“எப்டி?”

“உதாரணத்துக்கு ஜோவுக்கு படத்துக்கு பத்துலட்சம் பேசியிருக்கிறார்கள் என வை. ஜோ என்ன செய்கிறார்?... பத்துலட்சத்துக்கு நடிப்பதற்கு பதில் ஒரு கோடி ரூபாய்க்கு நடித்து விடுகிறார். என்னவாகிறது? 90 லட்சம் தயாரிப்பாளர் பாக்கி தர வேண்டி வருகிறது. இப்டிதான் ஒவ்வொரு தயாரிப்பாளரும் ஜோவுக்கு கடனாளி ஆகியிருக்கின்றனர். ஜோ ஒரு அம்பது படம் நடிச்சிருப்பார்னு வச்சுக்க. அப்டித்தான் நடிகர்கள்ல பசுபதியாம். அஞ்சு ரூபாய்க்கு நடிக்க சொன்னா அய்நூறு ரூபாய்க்கு நடிச்சு புரடியூஸரை 495 ரூ கடனாளி ஆக்குகிறாராம்!”

முறுவலித்தான் நிலா.

“ஓ.கே... ஜீவன் நடிக்கும் புதுபடத்துக்கு டைட்டில் சொல்லு பார்ப்பம்!”

“எனக்கு வைக்கத் தெரியாது!”

“நானே சொல்றேன்... தடிமாடு!”

“உன்னுடைய பிளேடு பக்கரி ஜோக்ஸை இத்துடன் நிறுத்திக் கொள். லீ ராயல் மெரிடியன் நெருங்கிவிட்டோம்!”

காரை ஹோட்டலுக்குள் செலுத்தி நிறுத்தினான். இறங்கினான். கலைந்திருந்த தலைகேசத்தை மேலும் கலைத்துவிட்டுக் கொண்டான்.

குழுமியிருந்த காவல்துறை வாகனங்களை தாண்டி நடந்தான் நிலா.

பார் பகுதியை மஞ்சள் ரிப்பனால் கட்டமிட்டு சீல் பண்ணியிருந்தனர்.

காவல்துறையின் புகைப்பட நிபுணர் பாச்சாவின் அமர்நிலை பிரேதத்தை பல கோணங்களில் புகைப்படமெடுத்துக் கொண்டிருந்தார். தடயவியல் நிபுணர் மேஜையிலிருந்த மதுக்கோப்பையில் ரேகைதடயம்

தேடிக்கொண்டிருந்தார். சிவப்பு ஒயின் பாட்டில், சிவப்பு ஒயின் மீதமிருக்கும் மதுக்கோப்பையும் ரசாயன பரிசோனைக்காக அனுப்பப்பட்டன.

காவல்துறை அதிகாரி நிலாவைப் பார்த்ததும் உற்சாகமானார். "ஹாய் நிலா!"

"ஹாலோ சார்!"

"கொலை செய்யப்பட்டிருப்பது மேக்ரோ ஸ்டார் மனோஜ்குமாரின் மேனேஜர் பாச்சா!"

"பாச்சா அதிகம் நடிகர் வடிவேலுவின் காமெடி ட்ராக்குகளில் வருவார் இல்லையா?"

"ஆமா!"

"பார் மேனேஜரை நீங்க விசாரிக்கிறீங்களா, நான் விசாரிக்கவா?"

"நீங்களே விசாரியுங்க!"

"மிஸ்டர்! கம் ஹியர்... உங்க பெயர்?"

"ஸாஜு!"

"மலையாளி?"

"இம். கொச்சின் நேட்டிவ்!"

"இங்கு எத்னி வருஷமா வேலை பாக்றீங்க?"

"பத்து வருஷமா..."

"இறந்து போன மேனேஜர் பாச்சா தினம் இந்த பாருக்கு வருவாரா?"

"வருவார்!"

"துணைக்கு யாரையும் கூட்டி வருவாரா?"

"இல்ல... தனியாத்தான்..."

"இங்க வந்த பிறகு அவரோடு யாரும் ஜோடி சேருவார்களா?"

"யாருடனும் ஜோடி சேரமாட்டார்!"

"போன் யாருக்கும் பண்ணுவாரா?"

"நோ இன்கம்மிங் அண்ட் நோ அவுட்கோயிங் கால்ஸ்!"

"இரவு எத்னி மணிக்கு வருவார். எத்னி மணிக்கு போவார்?"

"ஒன்பது மணிக்கு வந்து 11 மணிக்கு போவார்!"

"என்ன பிராண்டு மது குடிப்பார்?"

"பெரும்பாலும் ஸ்காட்ச் விஸ்கி. வெஜிடேரியன் சைடு டிஷ்ஷஸ்!"

"இன்றைக்கு வந்தபோது டென்ஷனா இருந்தாரா?"

"இல்ல!"

"ட்ரிங்ஸை ஸ்பான்ஸர் பண்ண உங்க நிர்வாகம் அனுமதிக்கிறதா?"

"பெரும்பாலும் இல்லை!"

"இன்றைக்கு மட்டும் எப்படி?"

## யோசனை

**சு**வாமி படங்களைத் துடைக்கும் தண்ணீரில் கற்பூரத்தை கரைத்துத் துடைத்தால் பூச்சி அரிக்காது.

**சி**றிது பஞ்சில் 'சென்டை' எடுத்து டெலிபோன் பேசும் வாய்ப்புறம் தடவி விடுங்கள். மணக்க மணக்கப் பேசலாமே.

- ஹரிஹரன், திருவனந்தபுரம்

எண்கள் கூறினார் ஸாஜு. ஒரு எண்ணை நிலா தொடர்பினான். "மிஸ்டர் பாஸ்கர்?"

"எஸ்!"

"நேற்று உங்கள் பிறந்த நாளா?"

"இல்லையே..."

"மாலை ஆறுமணிக்கு எனக்கு ஒரு போன் வந்தது. பேசியவர் எங்களின் மரியாதைக்குரிய கஸ்டமர்களில் ஒருவரான பாஸ்கர். இன்று அவர் பிறந்தநாள். மாலை 7-11 மணி வரை குடிக்கப்படும் மதுபானங்களை ஒட்டுமொத்தமாக ஸ்பான்ஸர் பண்ணுவதாக அறிவித்து டீலாக்ஸ் ஈ-கேஷை எங்க அக்கவுண்டுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணினார்!"

நிலா தோள்களை குலுக்கிக் கொண்டான். "பாஸ்கர் எந்த எண்ணில் பேசினார்? பாஸ்கரின் தொடர்பு எண்கள் எத்தனை உங்களிடம் உள்ளன?"

ஸோனி வயோ பார்த்து

"லீ ராயல் மெரிடியன் பாருக்கு ஏதாவது தொகை நேற்று ஸ்பான்ஸர் பண்ணீர்களா?"


"இல்லையே..."

"உங்க குரலில் பேசி யாரோ உங்க பணம் ரெண்டு லட்சத்தை பார் குடிமக்களுக்கு ஸ்பான்ஸர் செய்துள்ளார். கூடுதல் விபரம் பிறகு கூறுகிறேன்!"

நிலா மீண்டும் ஸாஜுவிடம் நிமிர்ந்தான். "கொலையாளி எக்ஸ்தான் போகஸ் பெயரில் உங்களை ஏமாற்றியுள்ளான்!"

"கடவுளே!"

"பாருக்குள் க்ளோஸ் சர்க்யூட் கேமிரா கண்காணிப்பு உண்டா?"



“உண்டு!”

“உங்களின் சிசிடிவி பதிவுகள் எனக்கு தேவை!”

“தருகிறோம் சார்!”

“பார் ஊழியர்கள் பட்டியல் தேவை!”

“தருகிறேன்!”

வாடிக்கையாளர்களில் ஒருவராக கூட வந்திருக்கலாம். அல்லது பார் டிஸ்பிளேக்கு பின்னாலோ அல்லது டிஸ்பிளேக்கு கீழோ ஒளிந்திருக்கக்கூடும்.”

ஸாஜூ மௌனித்தார்.

காவல்துறை அதிகாரி, “நிலா! மனோஜ்குமாரை முழுதும் முடக்கத்தான் பாச்சாவை கொலையாளி கொன்றிருக்கிறான். பாச்சா இல்லாமல் மனோஜ் யூரின் கூட போக மாட்டார்.”

“இது மீடியாவின் இல்யூஷன். மனோஜ்குமாருக்கும் பாச்சாவுக்கும் கொஞ்ச நாட்களாக டேர்ம்ஸ் சரி இல்லை. மனோஜ் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூட பாச்சாவைக் கொன்றிருக்கலாம். இந்த உலகத்தில் யாரை நம்பியும் யாரும் இல்லை. இந்த உலகத்தில்

“பாச்சா முதலில் நான்கு லார்ஜ் ஒயின் குடித்திருக்கிறார். அதில் சயனைடு கலக்கப்படவில்லை. ஐந்தாவது ரவுண்டு ஒயினில்தான் சயனைடு கலக்கப்பட்டிருக்கிறது. விக்டிம் முதலில் ஓரளவு குடிச்சு பிரக்ஞை இழக்கட்டும் – அதன்பின் சயனைடு கலப்போம் என கொலையாளி திட்டமிட்டிருக்கிறான். கொலையாளிக்கு பார் அட்டன்டர் உடந்தையாக இருந்திருக்க பிப்டி பிப்டி சான்ஸ் இருக்கிறது. அல்லது கொலையாளி

**தி**ருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி கோயில் முன்புறம் உள்ள பிரம்ம தீர்த்தம் என்ற சோம ரோகிணி (தெப்பக்குளம்) முதலாம் நூற்றாண்டில் கரிகால சோழனால் வெட்டப்பட்டது. குளத்தின் நீளம் 611 அடி, அகலம் 330 அடி. குளத்தின் நடுவில் உள்ள அழகிய நீராழி மண்டபம் 1546–ஆம் ஆண்டு விஸ்வநாத நாயக்கரால் அமைக்கப்பட்டது.

- க.ரவீந்திரன்

தனியாகத்தான் பிறக்கிறோம், தனியாகத்தான் சாகிறோம்."

"இதுவும் ஒரு சாத்தியம் தான்!"

"மிஸ்டர் ஸாஜு! எதாவது புது தகவல் தெரிந்தா என்னைத் தொடர்பு கொள்ளுங்க!"

நிலாமகன் பார் வாசலுக்கு போய் நின்று பாரை லாங் ஷாட்டில் நோட்டமிட்டான். பின் பார் டிஸ்பிளேயில் நின்று பாரின் சகல திசைகளையும் உன்னித்தான். பாச்சா அமர்ந்திருந்த மேஜையின் எதிர் இருக்கையில் உட்கார்ந்து பார்த்தான்.

பாரின் பின்பக்க வழியாக வெளியேறி சகல பக்கங்களையும் பார்வையிட்டான்.

கைபேசி சிணுங்கியது. எடுத்தான்.

எதிர்முனையில் மனோஜ்குமார் அழும்குரலில் பேசினான். "யு ஆர் நாட் எ எபிஷியன்ட் டிடக்டிவ். உங்களை அமர்த்திய பிறகு எனது உதவியாளர் பாச்சா கொலை செய்யப்பட்டிருக்கிறார். இன்னும் எத்தனை கொலை விழ காத்திருப்பீர்கள்?"

"பாச்சா கொலை செய்யப்பட்ட விஷயத்தை உங்களுக்கு யார் சொன்னது?"

"பாரில் இருந்த ஒரு ரசிகர்– காவல்துறை அதிகாரி– ஒரு பிரஸ் ஆள் கூறினர். ஏன் என்னை சந்தேகப்படுறீங்களா நிலா?"

"பார் ரசிகர் பெயர்– பிரஸ் ஆள் பெயர் – காவல்துறை அதிகாரி பெயர் என்ன?"

"காவல்துறை அதிகாரி பெயர் மார்ட்டின். தவிர மீதி இருவர் பெயர் தெரியாது"

"பதட்டப்படாதீர்கள்... வி ஆர் ஆன் இன்வெஸ்டிகேஷன்... அத்துமீறி உள்ளே பிரவேசிக்காதிங்க... போனை வைங்க... நாளைக்கு விரிவா பேசுவம்!"

"இனி எனக்கு தூக்கம் வந்தமாதிரிதான்!"

"உங்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்தி இருக்கிறோம். பயப்படாம தூங்குங்க!"

"எங்க... ஸெடேடிவ் போட்டாலும் தூக்கம் வரமாட்டேங்குது!"

"ஓகே! பகலில் சந்திப்போம்!"

ஸிஸிடிவி பதிவுகளை காவல்துறை அதிகாரியும் நிலாமகனும் போட்டு பார்த்தனர். ஒரு 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் பாரின் டிஸ்பிளேக்கு அருகில் தென்பட்டான். ஆனால் நிழல் உருவாக. ஸில் அவுட்டாக.

தலையில் தொப்பி அணிந்திருந்தான். ஆனால் முக அமைப்பை யூகிக்க முடியவில்லை.

என்ட்ரி பாயின்ட் ஸிஸிடிவி பதிவுகளும் ஆராயப்பட்டன. பாச்சா ஐந்தாவது லார்ஜ் குடித்த சிலபல நிமிடங்களுக்குப் பின் அந்த வாலிபன் ஹோட்டலின் பிரதான வாசல் வழியாக வெளியேறுவது தெரிந்தது. வந்தவன் கார் கொண்டு வரவில்லை.

கார் அட்டன்டரை விசாரித்தால் மேல் விபரங்கள் தெரியக்கூடும்.

வந்தவன் காரை ஹோட்டலுக்கு வெளியே எங்காவது பாதுகாப்பாய் நிறுத்தியிருக்கக்கூடும். கொலையாளி அன்றாடம் காய்ச்சி அல்ல.

“கொலையாளி பற்றி ஹேஷ்யம் சொல்கிறேன்… கேளுங்க இன்ஸ்பெக்டர்!”

“சொல்லுங்க நிலா!”

“கொலையாளி பெண்ணல்ல ஆண்!”

“ஓ!”

“கொலையாளியின் உயரம் 5 அடி 8 அங்குலம். ஒபிஸிட்டி இல்லாத ஆரோக்கிய உடம்பு. எடை 68 கிலோ இருப்பான். வயது 28 இருக்கக்கூடும். கொலையாளி காக்டெயில் மிக்ஸிங் போன்ற மதுபானம் சார்ந்த படிப்பு ஒன்றை வெளிநாட்டில் படித்திருக்கக்கூடும்.”

“தென்?”

“கொலையாளி ஒரு மில்லியனராக இருக்கக்கூடும். கொலையாளிக்கு செஸ் விளையாட்டைத் தெரியும். ஒப்பனைக் கலையிலும் வல்லவன்.”

“மே பி!”

“கொலையாளி மனோஜ்குமாரை ஒரேடியாகக் கொல்ல விரும்பவில்லை. மனோஜ்குமாரின் அனைத்து ஆதரவு கரங்களையும் வெட்டி அவரை தனிமைப்படுத்த முயற்சிக்கிறான்.”

“இருக்கலாம்!”

“கொலையாளி மிக நிச்சயம் சினிமாத்துறை சார்ந்தவன். ஒன்று மனோஜ்குமாரின் போட்டி நடிகர்களின் ஆளாய் இருக்கலாம்.

அல்லது மனோஜால் பாதிக்கப்பட்ட தயாரிப்பாளர்களின் ஆளாய் இருக்கலாம்."

"அப்கோர்ஸ்!"

"கொலையாளி அடுத்து என்ன செய்வான் என்பதனை மோப்பம் பிடிக்க வேண்டும். அடுத்த காரியத்தை அவன் செய்வதற்குள் அவனை உயிருடனோ பிணமாகவோ பிடித்து விட வேண்டும்."

"கேரி ஆன் நிலா!"

நிலாமகனும் மேகாவும் கிளம்பினர். இருவரும் காருக்கு நடந்தனர். நிலா காரை செலுத்தினான். "நீ இந்த கேஸை பத்தி என்ன நினைக்கற மேகா?"

"ஆணாதிக்கமாயிருக்கு. என்னை எங்க சுதந்திரமா செயல்பட விடுறீங்க?"

"நோ புலம்பல். இப்ப சொல் உன் யூகிப்பை!"

"கொலையாளியின் அடுத்த மூவ் சொல்கிறேன். மனோஜ்குமார் சொந்தப் படம் ஒன்று எடுத்து வருகிறார். அது முடிவுறும் நிலையில் இருக்கு. அந்தப் படத்தை எதாவது ஒரு விதத்ல சீர்குலைக்க கொலையாளி முயற்சிக்கலாம்." என்றாள். நிலா "ஸ்மார்ட் கெஸ்ஸிங்!" என பாராட்டினான்.

நிலாவும் மேகாவும் காரில் போவதை கோக் குடித்தவாறே வெறித்தான் அவன்.

"மனோஜ்குமாரின் அழிவை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. கோலிவுட்டின் சரித்திர பக்கங்களிலிருந்து மனோஜ்குமார் பெயரை அகற்றுவேன்... அகற்றியே தீருவேன்!" அவனது வாய் லஷ்கர்–ஈ–தோய்பா தனமாய் முணுமுணுத்தது.

## 4

ஆழ்வார் பேட்டை.

அந்தரங்க உதவியாளர் எட்டினார். 'யவனசுந்தர் கூப்பிடுறாரு போங்க!"

நிலாமகனும் மேகாவும் உள்ளே நடந்தனர்.

புஜபராக்கிரமம் காட்டும் பனியன் தொளதொள பைஜாமா அணிந்து உட்கார்ந்திருந்தார் யவனசுந்தர். "கம்கம். சிட் டவுன். என்ன சாப்டுறீங்க?"

"நோ தாங்க்ஸ்!"

"டிடக்டிவ், உங்க பேரு?"

"நிலாமகன். இவங்க என் உதவியாளினி மேகா!"

"நிலாவைப் போன்ற ஆணின் மகனா? நிலவின் சாயலில் இருக்கும் இளையவனா நீங்க?"

"எனது பேருக்கு எந்த விசேஷ அர்த்தமும் இல்லை!"

"ஓகே... என்ன விஷயத்துக்கு வந்தீங்க நிலா?"

"நடிகர் மனோஜ்குமார் விஷயமாக பேசவந்தேன்!"

"ஓ தட் பாஸ்டர்ட்! அவனுக்கென்ன?"

"நீங்களும் அவரும் நண்பர்களா, பகைவர்களா?"

"எனக்கு பகைவனாய் இருக்கவும் ஒரு தகுதி வேண்டும். அவனுக்கு எந்த தகுதியும் இல்லை அவனுடைய முன்னேற்றத்துக்கே நான்தான் காரணம். என்னுடைய சொந்த படத்தில்தான் அவன் வில்லனாக அறிமுகமானான். அவனுக்கு நடிக்கவே தெரியாது. ஒரு டென்மார்க் திக்குவாய் தமிழ் பேசுவது போல் தமிழ் பேசுவான். போர்னோகிராபிக் படங்களில் நடிக்க ஏற்றவன். இன்னும் எப்டி பிலிம் இன்டஸ்டரியில் அவன் சர்வைவ் பண்ணிக்கிட்ருக்கான்றது எனக்கு புரியாத புதிர். பேட்டிகளில் எல்லாம் அவன்தான் எனக்கு போட்டி என்கிறான். நொட்டோரியஸ் பாபுலாரிட்டியில் ஈடுபாடு உள்ளவன்!"

"மனோஜ்குமாரின் மேனேஜர் பாச்சா கொலை செய்யப்பட்டது உங்களுக்கு தெரியும்தானே?"

"தெரியாமலிருக்க நானென்ன அலாஸ்காவிலா குடியிருக்கிறேன்? பாச்சா ஒரு கடின உழைப்பாளி. தவறான இடத்தில் சேர்ந்திருந்து இன்னுயிரை இழந்து விட்டான் பாச்சா!"

"பாச்சா கொலைக்கும் உங்களுக்கும் தொடர்பிருக்கும் என ஒரு சந்தேகம்..."

"யாருக்கு? உங்களுக்கா, மனோஜ் குமாருக்கா, மீடியாவுக்கா?"

"எனக்கென்றே வைத்துக் கொள்ளுங்கள்!"

பொகார்டி ஃப்ரீஸரை குடித்தவாறே சிரித்தார் யனவசந்தர். "நல்ல கதை... அதுக்கெல்லாம் எனக்கு நேரமில்லைப்பா... என் வீட்டு சமையலறைல கரப்பான்பூச்சிகள் வசிக்கின்றன. அவைகளை

எனக்கு பிடிக்கலைதான். அதுக்காக கொல்ல வாடகை கொலையாளி அமர்த்துவேனா? மனோஜ்குமாரின் நிழலுக்குக் கூட மனோஜ்குமாரை பிடிக்காது. அவனுக்கு தமிழில் பிடிக்காத கெட்டவார்த்தை. 'நன்றி'... அவனை அவனது ஆட்களை திட்டமிட்டு யார் கொல்ல முனைவர் என்று எனக்கு தெரியும்..."

"யாரது?"

"மனோஜ்குமாரின் முதல் மனைவி கங்கை. கங்கை பெரிய பணக்காரி. அவளது காசுக்கு ஆசைப்பட்டு அவளை காதலித்தான் மனோஜ்குமார். பின்னாளில் ஒரு கட்டத்தில் அதே கூடுதல் காசுக்காக மனோஜ் கங்கையை கழற்றி விட்டு விட்டான். Gangai is a potential killer"

"கங்கைக்கும் உங்களுக்கும் நட்பு உண்டா?"

"ஏன் கேக்றீங்க?"

"வழமையான கேள்விகள்தான்!"

"கங்கை என் தோழிதான். அதுக்கென்ன?"

"விரோதியின் முன்னாள் மனைவி தோழி- சரியான பார்முலாதான்!"

"நான் கங்கையை முடுக்கிவிட்டு மனோஜ்குமாருக்கு எதிராக செயல்பட வைக்கிறேன் என்று நினைக்கிறீர்களா?"

சிரித்தான் நிலாமகன்.

"என்ன சிரிக்றீங்க?"

"நிறைய கேள்விகளுக்கு நீங்களே

**தூறல்**

ஒரு வண்ணத்துப் பூச்சியை
பிடித்து வை...
அவள் முக அலங்காரத்திற்கு
நிறத்தை தொட்டுக்கொள்ள!

- பொதக்குடி வெற்றிமுரசு

பதில் சொல்லிவிடுகிறீர்கள் சார். ஒரேநேரத்தில் உங்க தொண்டை பெட்டியில் நூற்றுக்கணக்கான எண்ணங்கள் ட்ராபிக் ஜாமாகின்றன. தமிழை கவிதைத்தனமாய் பேச முயற்சிக்கிறீர்கள்."

"அதனால்?"

"அதனால் ஒரு பிரச்னையுமில்லை. கங்கையின் கைபேசி எண்ணை தரமுடியுமா?"

"தருகிறேன். ஆனால் நான் தந்ததாகத் தெரிய வேண்டாம்!"

"சொல்ல மாட்டேன்!"

யவனசந்தர் கூறிய பத்து இலக்க எண்ணை குறித்துக் கொண்டாள் மேகா.

"உங்க உதவியாளினி மேகா அழகியபூனைக்குட்டி போலிருக்கிறார். மேகா விரும்பினால் எனது அடுத்தப் படத்தில் ஹீரோயினாக நடிக்கலாம்!"

"நோ தாங்க்ஸ்!" என்றாள் மேகா. நிலாவும் மேகாவும் விடைபெற்றனர். நிலா காரைச்

## நிலவில் முத்த மழை!

நிலவு போன்ற முகத்தில் சின்ன
கருவண்டு இரண்டு சுட்டித்தனமாக
என்னை எட்டி எட்டிப் பார்க்கிறது.
கொவ்வைச் செவ்வாய் இதழிலிருந்து
தேன் வடிகிறது
முத்தம் தந்து அதைச் சுவைக்க
என் இதழ்கள் துடிக்கின்றன
காற்றில் ஆடும் செடியின் இலைகளாகப்
பிஞ்சுக்கரங்கள் விரல்களை
ஆட்டி, ஆட்டி என்னை அழைக்கிறது.
இப்பிஞ்சு மழலையைப் பெற நான்
என்ன தவம் செய்தேனோ?
சுட்டித்தனமாய் எங்கும்
சுற்றித் தவழும் அந்தச்
சின்னக் கருவண்டை
அள்ளித் தழுவுகிறேன்
ஆசைதீர உச்சி முகர்ந்து,
நிலவு முகத்தில்
முத்த மழை பொழிகின்றேன்.



- அமுத வல்லி இராகவசாமி,
காரைக்கால்

செலுத்த மேகா கங்கையிடம் தொடர்பினாள். "வி ஆர் டிடக்டிவ்ஸ்... வி வாண்ட்டு ஸ்பீக் வித் யூ!"

"என்ன விஷயம்?"

"உங்க மாஜி கணவர் மனோஜ்குமாரை பற்றிப் பேச வேண்டும்!"

"அவனைப் பற்றிப்பேச புதுசாய் என்ன இருக்கு?"

"மனோஜ்குமாரின் மேனேஜர் பாச்சா கொலை பற்றி என்ன நினைக்றீங்க?"

"டெவில் கூட இருந்தா இதுதான் தண்டனை!"

"பாச்சா இறந்தது உங்களுக்கு சந்தோஷம் தானே?"

"மனோஜ்குமார் இறந்தால் தான் எனக்கு சந்தோஷம்!"

"பாச்சா கொலைக் கும் உங்களுக்கும் எந்த விதத் திலாவது தொடர்பிருக்க வாய்ப்புண்டா?"

"இல்லை!"

"நீங்க மனோஜ்குமாரைப் பழிவாங்க விரும்பலையா?"

"நான் விரும்புறது தானா நடக்கும். நான் அதற்காக மெனக்கெட தேவையில்லை."

"பெர்சனல் கேள்வி. நீங்க மறுமணம் செய்து கொள்ள வில்லையா?"

"ஆம்பிளைப் பசங்க நன்றி கெட்ட மொட்டைப்பசங்க. மீண்டும் நான் ஏமாறத் தயாராய் இல்லை. எனது குழந்தைகளை சினிமா வாசனை இல்லாம நன்கு படிக்கவச்சு ஆளாக்குவேன்."

"தேவைப்பட்டா மீண்டும் உங்களை தொடர்பு கொள்கிறேன்... நன்றி!"

கைபேசியை கோமா நிலை ஆழ்த்தினாள் மேகா. "நாம இப்ப எங்க போறோம் நிலா?"

“சினிமா எடிட்டர் ஹோஸிமினின் ஸ்டுடியோவுக்குப் போகிறோம்!”

“எதற்கு?”

“மனோஜ்குமாரின் சொந்தப் படத்தின் கடைசி ஷெட்டியூல் ஷூட்டிங் முடிந்துவிட்டது. பிலிம் ரோல்கள் எடிட்டிங்குக்காக எடிட்டர் ஹோஸிமின்னின் மூவியோலா கேமிராவிடம் வந்திருக்கும்!”

“ஹோஸிமின்னின் எடிட்டிங் ஸ்டுடியோவுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதா?”

“ஆமாம்... போலீஸை மீறி ஒரு ஈ குஞ்சு காக்கா கூட உள்ளே போக முடியாது!”

“இப்படத்தில் எவ்வளவு பணத்தை இன்வெஸ்ட் பண்ணியுள்ளார் மனோஜ்?”

“அறுபது கோடி என்கிறார்கள். படத்தில் மனோஜ்க்கு நான்கு கதாநாயகிகளாம். ஹிந்தி கஜினி அளவுக்கு பிரிண்ட்ஸ் போடப் போகிறார்களாம்!”

“பிலிம் ப்ராஸஸிங் எந்த லேப்?”

“ஷஷாங்க் லேப்!”

“அங்கேயும் போலீஸ் பாதுகாப்பு உண்டுதான?”

“உண்டுண்டு!”

கார் எடிட்டிங் ஸ்டுடியோ நோக்கிப் பறந்தது.

**கா**வல்துறை வாகனம் தரைதேய்த்து நின்றது. அதிலிருந்து அஸிஸ்டெண்ட் கமிஷனர் இறங்கினார்.

அவரைக் கண்டதும் காவலுக்கு நின்றிருந்த காவல்துறை துணை அதிகாரிகள் சல்யூட் அடித்தனர்.

“எவரிதிங் இஸ் கோயிங் ஸ்மூத்–இஸின்டிட்?”

“யெஸ் சார்!”

“வெரிகுட்... கீப் இட் அப்!”

அஸிஸ்டெண்ட் கமிஷனர் உள்ளே நடந்தார். குளிர்பதன மூட்டப்பட்ட அறைக்குள் பிரவேசித்தார்.

சடைசடையாய் தலைகேசத்துடன் திரிதிரியாய் தொங்கும் தாடியுடன் எடிட்டர் வரவேற்றார்.

“குட்மார்னிங் சாரே!” மலையாள தமிழில் வரவேற்றார் ஹோஸிமின்.

“எடிட்டிங் வேலைகள் எப்படிப் போகின்றன?”

“நானும் எனது நான்கு உதவியாளர்களும் கடந்த பத்து நாட்களாக உயிரைக் கொடுத்து உழைத்துவருகிறோம். படத்தின் நீளம் ஊமைவிழிகளை விட அதிகம். ட்ரிம் பண்ணி வருகிறோம். மனோஜ்குமார் ஒரு யூஸ்லெஸ் பெல்லோ. படம் எடுக்கத் தெரியாமல் எடுத்து எங்க உயிரை வாங்றான். அவன் எடுத்த விதத்திலேயே ஸ்கிரீன் பண்ணினா லட்சக்கணக்கான ரசிகர்கள் வாழ்க்கையே வெறுத்து சாமியாரா போய்டுவாங்க!”

சிரித்தார் அஸிஸ்டென்ட் கமிஷனர்.

“எனக்கு ஒரு சம்சயம் ஏஸி சார்!”

“என்ன?”

“படம் ஓட மனோஜ்குமார் கிளப்ன வினோத புரளிகள் அதிகம்னு நினைக்றேன்!”

“புரளின்னு எதையும் புறக்கணிச்சிர முடியாது!”

“உங்களுக்கு கொலையாளி மேல் எவ்வித பயமும் இல்லையா?”

“நான் ஏன் சார் பயப்படனும்? சினிமா தொழிலை ஒரு யோகம் மாதிரி செய்றேன்.”

“படத்தின் ஒட்டுமொத்த ரீல்களும் இங்குதான் உள்ளனவா?”

“ஆம். ஏன் கேட்கிறீர்கள்?”

“உங்களுக்கு ஞாபக சக்தி அதிகமா?”

“எடிட்டிங்கில் அசாதாரண ஞாபகசக்தி அதிகம். மற்றவற்றில் பூஜ்யம்தான். காலைல என்ன சாப்பிட்டேன்னு எனக்கே தெரியாது. இதையும் ஏன் கேக்றீங்க?”

“காரணமாத்தான் நேத்தைக்கி நான் வந்தேன். இன்றைக்கும் நான் வந்திருக்கிறேன். இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?”

“தெரியலையே...”

“நேத்தைக்கு வந்தது ஓரிஜினல் ஏ.ஸி.. இன்னைக்கி வந்திருக்றது டுப்ளிகேட்!”

“அய்யோ... எண்ட குருவாயூரப்பா!”

"பதறாதிங்க. உங்களை நான் எதுவும் பண்ணமாட்டேன். நீங்களும் உங்க நாலு உதவியாளர்களும் இப்டி தரைல மண்டியிடுங்க!"

"மனோஜ்குமார் நல்லவனோ கெட்டவனோ? இந்தப் படத்தின் ரிலீஸை நம்பி நூத்துக்கணக்கான குடும்பங்கள் காத்திருக்கின்றன. மனோஜ்குமாரை பழி வாங்க வேண்டுமென்றால் அவனை நேரடியா பழி வாங்கு. அத விட்டுட்டு எதுக்கு தலையை சுத்தி மூக்கைத் தொடுற வேலை?"

**தென்றல்**

**வீ**ணை நரம்புகளாய்
அவள் கூந்தல்
ஆசையாய் மீட்டிச் செல்லும்
தென்றல்!

- பொதக்குடி வெற்றிமுரசு

"நம்ம மெட்டல் டிடக்டர்களும் பாம் டிடக்டர்களும் அவுட் டேட்டட்!"

"நோ அட்வைஸ் ப்ளீஸ்... எனக்கு கோ-ஆப்ரேட் பண்ணலைன்னா தயங்காம சுட்டுருவேன்!" ஸைலன்ஸர் பொருத்திய துப்பாக்கி வெளி நீண்டது.

ஐவரும் முழங்கா லிட்டனர்.

டூப்ளிகேட் ஏ.ஸி டைமர் பொருத்திய பாலிமர் பாமை மூவியோலாவுக்கு கீழே பொருத்தினான்.

பிலிம் சுருள் பெட்டிகளை தூக்கித் தூக்கி வந்து குவித்தான்.

ஒரு சிரின்ஜில் மயக்க மருந்தெடுத்து ஐவரின் புட்டத்தில் செருகி இழுத்தான். ஐவரையும் கழிவறைக்குள் தள்ளி பூட்டினான்.

பின் சாவகாசமாக நடந்து வெளியே வந்தான். "பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தியாக உள்ளன!"

"தாங்க்யூ சார்!"

"பாச்சா கேஸை ஆராயும் நிலா-மேகா ஜோடி வந்திட்டு போய்ட்டாங்களா?"

"இன்னும் வரல!"

"இருக்றதை வச்சுத்தான் நாம செயல்பட வேண்டியிருக்கு!"

"நான் கிளம்புகிறேன். ஈவினிங் ரவுண்டில் சந்திப்போம்!" டூப்ளிகேட் ஏஸியின் வாகனம் கிளம்பிப் போக இருபது நொடி தாமதித்து இன்னொரு காவல்துறை வாகனம் வந்து நின்றது.

அதிலிருந்து ஒரிஜினல் அஸிஸ்டென்ட் கமிஷனர் இறங்கினார்.

துணை அதிகாரிகள் திகைத்தனர். "இப்பத்தான் சார் வந்திட்டு போனீங்க. எதையும் மறந்திட்டீங்களா?"

"என்ன சொல்றீங்க? எந்த டூப்ளிகேட்டை பாத்து ஏமாத்தீங்க?"

நூறடி தூரத்தே காரை நிறுத்தி இறங்கினான் அவன். அவனது கையில் அதி நவீன ரிமோட் பூத்தது.

"யூனிபார்ம் போட்டுக்கிட்டு எந்த நாய் வந்தாலும் சல்யூட் அடிப்பான்க இந்த போலீஸ்காரன்க. மூஞ்ச பாக்க வேணாம்?"

ரிமோட்டை தடவிக் கொடுத்தான்.

பின் மெதுவாக மிக மெதுவாக அவனது விரல்கள் ரிமோட் பொத்தானுக்கு போயின.

"மனோஜ்குமாரா... உன்னுடைய 60 கோடி ப்ராஜக்ட் ஹோ கயா..." பொத்தானை அமுக்கினான்.

அவ்வளவுதான்...

ஹோஸிமின்னின் எடிட்டிங் ஸ்டுடியோவுக்குள் பிரளயம் பூத்தது.

பிலிம் சுருள்கள் எரிந்து கரிந்து உக்கிரஜ்வாலைகளை எழுப்பின. மனோஜ்குமாரின் 'சாகசன்' படம் எரிந்து சாம்பலானது.

வந்தவன் ஒப்பனையை அகற்றினான். காரின் நம்பர் பிளேட்டின் மீது ஒட்டப்பட்டிருந்த டூப்ளிகேட் நம்பர் ஸ்டிக்கரை பிய்த்தான். ரிமோட்டை மேன்ஹோல் கவரை தள்ளி உள்ளுக்குள் போட்டான்.

காரை செலுத்தியபடியே நிலாவுக்கு தொலைபேசினான். "என்ன டிடக்டிவ் நீ" நோயாளியின் உயிர் காப்பாத்த வரச் சொன்னா நோயாளியின் எழவுக்கு வந்து நிக்றியே? என்னுடைய அடுத்த மூவ் இதை விட பிரமாண்டமா இருக்கும்... அதுவரை நீ உயிருடன் இருந்தால் – காத்திருந்து வேடிக்கை பார்!" பேசிமுடித்த கைபேசியிலிருந்த சிம்கார்ட் அகற்றி பூட்ஸ் காலால் மிதித்தான் அவன்.

## 5

மனோஜ்குமார் இரவாடையில் இருந்தான். ரப்ரப் என்று முகத்தில் அறைந்து கொண்டான். தலைக்கேசத்தை பிய்த்துக் கொண்டான். தரையில் உருண்டு புரண்டான். அறைக்குள்ளிருந்த பொருட்களை போட்டு உடைத்தான். நொடிக்கு நூறு வார்த்தைகள் வேகத்தில் கெட்ட வார்த்தைகளை அள்ளித் தெளித்தான்.

"யார்ரா நீ... பாஸ்டர்ட்.. என் வாழ்க்கைல குறுக்கே வந்த கூத்தாடுற? நான் உனக்கு என்னடா தப்பு செஞ்சேன்? உன் தின்கிற சோத்ல மண்ணை அள்ளி போட்டேனா? அல்லது கூட உறவாடி உன் குடியைக் கெடுத்தேனா? குப்புற தள்ளி குழியும் பறித்து மூடி சிமிண்ட்டில் கல்லறை கட்டிவிடுவாய் போலிருக்கிறது! அய்யோ அய்யோ அய்யோ... சொந்தப் படம் எடுத்தவன் கதியெல்லாம் அதோ கதி என தெரிஞ்சும் படம்

எடுத்தேனே... இனி திருவோடுதானா? இனி பாண்டி பஜார் பக்கம் பிச்சை எடுக்க வேண்டியதுதானா? என் திமிர் குரலுக்கு எவனும் பிச்சை போட மாட்டானே?"

மருத்துவரை கவலையாய் பார்த்தாள் நிலா. "அவரை பஸிபை பண்ண எதாவது செய்யுங்களேன்!"

"இரண்டு தடவை ஹெவி டோஸ் ஸெடேட்டிவ் செலுத்தி விட்டேன்... பிரயோஜனமில்லை!"

"மனோஜின் பி.பி. எப்டி இருக்கு?"

"வெரி ஹை பி.பி. ஸ்ட்ரோக்கோ ஹார்ட் அட்டாக்கோ வரக்கூடிய நிலை– ஹி இஸ் சிவியர்லி மென்ட்டலி டிஸ்டர்ப்டு"

"மனோஜ்! உங்க சொந்த பட ஏரியாக்களை டிஸ்டிரிப்யூட்டர்களுக்கு வித்திருந்தீங்கதான?"

"இல்ல... லம்ப்பா தொகை அடிக்கலாம் ஓன் டிஸ்டிரிபுயூட் செஞ்சுன்னு மனப்பால் குடிச்சேன்... எல்லாம் இப்ப போச்சு!"

"பணம் போனா என்ன சம்பாதிச்சிக்கிடலாம். மொதல்ல உங்க உடல்நலத்தை பாருங்க!"

"போய்யா... நீயும் உன் அட்வைஸூம்... உன் பர்ஸிலிருந்து ஆயிரம் ரூபாய் காணாமல் போனா எவ்வளவு வருத்தப்படுவ? நான் ஒட்டுமொத்தமா அறுபது கோடி தொலைச்சிட்டுருக்கேன்!"

மருத்துவர் பேசினார். "எங்க இஸ்லாமில் இறைத்தூதர் கோபத்தை அடக்க சில வழிமுறைகளை சொல்லிக் குடுத்திருக்கார். "வீரன் என்பது மல்யுத்தத்தினால் அல்ல. கோபத்தின்போது தன்னை அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரன்' என்றிருக்கிறார் நபிகள் நாயகம். கோபம் வந்தால் பேசுவதை நிறுத்திவிட்டு மல்லாக்க கைகால்களை தளர்த்தி படுக்கலாம். சவாசனம் நிலை. மனதை வேறொரு பக்கம் திருப்பி அதன் தொடர்ச்சியை மனக்கண்ணில் காணலாம். 'எதை கொண்டு வந்தோம் எதை கொண்டு போவதற்கு' எனும் கீதாசாரத்தை மனதில் கொள்ளலாம். அதைவிட முக்கியம் சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரனின் காலில் விழலாம். சமாதானம் என்பது இரு தரப்பு வெற்றி!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"சரண்டர் அல்லது சரணாகதி அடையுங்கள்... இருகைகளையும் உயரத் தூக்கி விடுங்கள். என்னை விட்டுவிடு

தொடர்ச்சி 34-ம் பக்கம்

31-ம் பக்கத் தொடர்ச்சி என இறைஞ்சுங்கள்."

"எதிரி யாரென்றே தெரியாத போது யாரிடம் போய் நான் இறைஞ்சுவது!"

"மீடியாவுடன் பேசும்போது எதிரிக்கு வெள்ளைக்கொடி காட்டுங்கள். எதிரி நிச்சயம் இரக்கம் கொள்வான். உங்களிடமிருந்து எதையாவது பெற்றுக்கொண்டு உங்களை மன்னிப்பான்!"

நிலாமகன் குறுக்கிட்டான். "நீங்க பேசும்விதம் எனக்கு உடன்பாடில்லை. எதிரி மனோஜை மன்னிக்கலாம்... மனோஜ்க்கும் எதிரிக்கும் இடையே உடன்பாடு வரலாம். ஆனா எதிரியின் குற்றங்களை சட்டம் மன்னிக்காது!"

"ஒரு குடும்ப மருத்துவராய் நின்று ஒரு நோய் தீர்க்கும் மருந்து சொன்னேன். மருத்துவத்துக்கு சட்டம் தெரியாது. மிஸ்டர் மனோஜ்குமார்! இன்னும் ரெண்டுமணி நேரத்தில் நீங்க நார்மல் ஆகாட்டி எங்க கிளினிக் வந்து அட்மிட் ஆய்டுங்க... ஒரு நாலுநாள் எங்க டாரக்ட் கேரில் இருந்தா நார்மல் ஆவீங்க!"

"ஐ வில் ஸீ... நீங்க இப்ப போகலாம்!"

மருத்துவர் திரும்பித் திரும்பி பார்த்தபடி போனார். அவர் போனவுடன் மனோஜ் நிலாவிடம் சீற்றமாக திரும்பினான். "ஹோஸிமின்னின் எடிட்டிங் ஸ்டுடியோ வெடிச்சு தூள்தூளாகியிருச்சு. ஆனா ஹோஸிமின்னும் அவரது உதவியாளர்களும் உயிர் தப்பிச்சிட்டாங்க இல்லையா?"

"ஆமா... சதியாளி அவர்களை பாதுகாப்பா டாய்லட்டுக்குள்ள போட்டு பூட்டிருக்கான். வெடிப்பின் இம்பாக்ட் டாய்லட் அறையை ஒன்றும் செய்யவில்லை!"

"ஹோஸிமின் சதியாளிக்கு உடந்தையோ?"

"அப்படி சொல்வதற்கில்லை. ஹோஸிமின்னும் அவரது உதவியாளர்களும் போலீஸால் விசாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சதியாளியின் ஒப்பனை உருவத்தை வர்ணிக்கச் சொல்லி ஐடென்டிகிட் படம் தயாரிக்கிறது போலீஸ். ஹோஸிமின் எப்பவுமே கனவுலகில் சஞ்சரிச்சுக் கொண்டேதான் யாருடனும் பேசுவார். அவர் முகத்தை அவர் கண்ணாடியில் பார்த்தே பதினெட்டு வருடங்கள் ஆகிறதாம். வந்தவனின் முகம் பற்றி அவர் பெரிதாய் வர்ணிக்கவில்லை!"

"குருட்டுப்பய... குருட்டுப்பய!"

"அவரை ஏன் திட்றீங்க? சதியாளி உபயோகப்படுத்திய எக்ஸ்ப்ளோஸிவ்ஸ்

ஹைலி ஸோபிஸ்டிகேட்டட். அல்காயிதா தீவிரவாதிகள் தரம்... பாகிஸ்தான் தீவிரவாதிகளின் சொர்க்கபூமி ஆகிவிட்டது. பாகிஸ்தானின் நிச்சயமற்ற அரசியல் சூழல் ஆசியா கண்டத்தைப் பாதுகாப்பாற்ற தாக்கிவிட்டது. தீவிரவாதிகளின் படுபயங்கர ஆயுதங்கள் சாதாரண கிரிமினல்களுக்கும் எளிதில் கிட்டுகின்றன. அடுத்த இருபது வருடத்தில் பாகிஸ்தான் எதியோப்பியா சோமாலியாவை விட மோசமான நாடாகிவிடும்."

"என் பாதுகாப்பைப் பற்றி கவலைப்படச் சொன்னா நம்ம நாட்டோட பாதுகாப்பைப் பற்றி கவலைப்படுறியே டிடக்டிவ்?"

"கொலையாளி உங்க தொழில் போட்டி நடிகர் அமர்த்தியவனல்ல. உங்களுக்கு எதிரான தாக்குதல் திட்டத்தை இரண்டு மூன்று வருடங்கள் யோசித்து வடிவமைத்திருக்கிறான்!"

"அவனுடைய அருமை பெருமைகளை கேட்க நான் தயாரில்லை!"

வாசலில் காலடி அரவம் கேட்டது. இருவரும் திரும்பினர். மனோஜின் நாலாவது மனைவி சோபியா நின்றிருந்தாள். குளிர் கண்ணாடி அணிந்திருந்தாள். தலைகேசத்தின் அடர்த்தி குறைந்திருந்தது. நடுவகிடின் அகலம் கூடியிருந்தது. டை உபயத்தில் கூந்தல் செயற்கை கறுமையாய் கிராபைட் தனமாய் மிளிர்ந்தது. அகலக்கண்கள் சுரந்து அடியில் மூன்று தசைமடிப்புகள். மூக்கில் கரும்புள்ளிகள். நிகோட்டின் ஆல்கஹால் படிந்த ஊறிய ஈறுகள். பலம் இழந்த பற்கள். லிப்ஸ்டிக் ஈஷிய உதடுகள். கனத்த கனம் தாங்காமல் கீழே இழுபட்ட பிளாஸ்டிக் கேரிபேக் போல் வடிவம் கூட்டும் பிரேஸியரில் தொங்கும் மார்பகங்கள். அவளது கையில் மடிகணினியும் மல்டிமீடியா ஸெல்போனும்.

வந்தவள் உன்மத்தமாக மனோஜை முறைத்தாள். "இப்ப திருப்தியாடா?"

"டிடக்டிவ் நிற்கிறார் பாத்து பேசு!"

"தனி ரூமுக்கு வாடா பேசவேண்டும்!"

"எக்ஸ்க்யூஸ் மீ நிலா!" இருவரும் ஓர் அறைக்குள் புகுந்து அறையை உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டனர்.

"இப்பச் சொல்லு சோபியா?"

"என்னை எதுக்குடா கல்யாணம் பண்ணிக்கிட்ட?"

"நான் உன்னை காதலிக்கிறேன்!"

"உலகத்லயே மோசமான கெட்ட வார்த்தை காதல்தான். உனக்கு

காதல் பத்தி என்னடா தெரியும்? நீ ஒரு ஆண் பிராஸிடியூட். உன் சிக்ஸ்பேக் உடம்பை காட்டி என்னை ஏமாத்திட்ட. நான் எறும்பு மாதிரி உழைச்சு சேத்த பணத்தை யானை மாதிரி ஊதாரிதனமா செலவு பண்ணிட்ட உன் சொந்த படத்துக்கான முதலீட்டை என் சொத்துகளை அடகு வைச்சு பண்ணின. இப்ப பாரு அறுபது கோடியும் அம்போன்னு போயிருச்சு!"

"கோபப்படாதே சோபி, ஆறுதல் சொல்ல வேண்டிய நீ ஆத்திரப்படலாமா?"

"உனக்கு ஆறுதல் சொல்லக்கூடாது... உன்னை கசாப்புக்கத்தி வச்சு கண்டம் துண்டம் பண்ண வேண்டும்!"

"உன் மீதான என் காதல் பொய்யா?"

"பசப்பாதே... உன் திருவிளையாடல்கள் அனைத்தும் எனக்கு தெரியும்!"

"நான் திருந்தி ரொம்ப நாளாகுது செல்லம்!"

"எனக்கு பணம் போனது கூட பெரிய வருத்தமில்லை. ஆனா நீ பழகின யானைய வச்ச புதுயானைகள் பிடிக்ற பாரு... அத... அதத்தான் என்னால் ஜீரணிக்க முடியல!"

"பழகின யானை யார்? புது யானைகள் யார்?"

"நீ கடைசியா என்கிட்ட செக்ஸ் வச்சு எத்னி நாளாகுது?"

"ஞாபகமில்ல!"

"நான் சொல்றேன்.... நாலு மாசமாகுது... உன் கடைசி அட்டம்ட் கூட ப்ரி எஜாக்குலேஷன்தான்..."

"அது... அன்னைக்கி கொஞ்சம் குடிபோதைல இருந்தேன்... கண்ட்ரோல் கிடைக்கல!"

"சரி... வெளில நீ செக்ஸ் வச்சு எத்னி நாளாகுது?"

"அப்டி எதுவும் இல்லையே!"

எட்டி அறைந்தாள். "பொய் சொல்லாதே. சமையல்கத்தி வச்சு நறுக்கிடுவேன் நறுக்கி."

"இல்லை இல்லைன்னு யார் மேல சத்தியம் பண்ண?"

"என் மேல் பண்ணு பார்ப்பம்!"

பண்ணப் போனான். "நிறுத்துடா... சில விடியோ கிளிப்பிங்குகளை

பாத்திட்டு சத்யம் பண்ணு"

ஸ்தம்பித்தான் மனோஜ்குமார்.

மடிகணினியை உயிர்ப்பித்தாள் சோபியா. தேதி வாரியாக காட்சிகள் ஓடின. கடந்த 15 நாட்களில் 15 வெவ்வேறு பெண்களுடன் மனோஜ் செக்ஸ் வைத்துக் கொள்வது ஸ்பை கேமினால் எடுக்கப்பட்டிருந்தது.

"இது ஏதோ டிஜிட்டல் சாகசம். நம்பாதே!"

"தூ... இன்னும் பொய் சொல்கிறாயே?"

"த பார் சோபி... சினிமா நடிகன்னா கொஞ்சம் அப்டிஇப்டித்தான் இருப்பான். அத பெரிது படுத்தக்கூடாது. நமது ஸோஷியல் இமேஜை ப்ரிசர்வ் பண்ண நமது திருமணம் உதவுகிறது. உனக்கு எக்ஸ்ட்ரா மரைட்டல் அபயர்ஸ் தேவைன்னா தேடிப்போ. நான் தடுத்தேனா? ஹாலிவுட் நடிகை கேட்டி வின்ஸ்லெட் பார். கட்ன புருஷனை வச்சுக்கிட்டே 'என் பெஸ்ட் ஆண் நண்பன் லியனார்டோ டி காப்ரிகோன்ரா. கேட்டுட்டு புருஷனும் சிரிக்கிறான்... விஷமமா காப்ரிகோவும் சிரிக்கிறான்."

"நான் எனது திருவிளையாடல்களை நிறுத்தி

**உ**லகில் தொடர்ந்து 5000 ஆண்டுகளாக மக்கள் வசித்து வரும் பழமையான நகரம் காசி (உத்திரப்பிரதேசம்) காசி இந்து பல்கலைக்கழகம் 5.5 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது. இதில் 124 பாடப் பிரிவுகள் கற்பிக்கப்படுகின்றன இங்கு 64 விடுதிகள் உள்ளன. 15,000 மாணவர்கள் கல்விப் பயில்கின்றனர். இவர்களில் பெரும்பாலோனோர் வெளிநாட்டினர்.

- க.ரவீந்திரன்





ரொம்பநாளாகுது. நீதான் தொடர்ந்து ஆடி வருகிறாய்!"

"இருக்ற பிரச்னை போதாதுன்னு நீ வேற வந்து ஜிங்ஜிங்னு ஆடாத... கிளம்பு. இன்னொரு நாள் பொறுமையா பேசுவம்!"

ஆங்காரமாய் சிரித்தாள் சோபியா. "இன்னைக்கி எல்லாவற்றையும் பேசி தீர்த்துக்கலாம்னு வந்திருக்கிறேன்!"

"பேச வேண்டியது என்ன இருக்கு? உனக்கும் எனக்கும் டைவர்ஸ் புதுசா என்ன? பேசாம டைவர்ஸ் பண்ணிக்குவம்!"

"நான் உன் மொத பொண்டாட்டி மாதிரி இளிச்சவாய்னு நினைச்சியா?"

"அவ இளிச்சவாய் அல்ல–தியாகி!"

"டேய் மனோஜ்! இன்னைக்கி எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்ட வந்திருக்கிறேன்..."

"என்னடி ஓவரா பேசுற? பேசிப்பேசி என்னை கொலைகாரன் ஆக்காதே!"

சட்டென்று ஒளித்திருந்த ரிவால்வரை வெளியெடுத்தாள் சோபியா. "கடந்த ரெண்டு வாரமா யாரோ ஒருத்தன் எனக்கு விடியோ மெயிலும் எம்எம்எஸ்களும் எஸ்எம்எஸ்களும் அனுப்பி டார்ச்சர் குடுக்கிறான். உன் புருஷன் திருவிளையாடல், எல்லாம் தெரிஞ்சு ஊமையா இருக்றியா? அப்டியிருக்க உனக்கு வெக்கமாயில்ல. உடந்தையா இருக்க உன் புருஷன் உனக்கு எவ்ளவு சம்பளம் தரான்னு படுகேவலமா கேக்றான்.. அதனால..."

"அதனால?"

"நான் இருபது ரூபாய் பத்திரம் கொண்டு வந்திருக்கேன். அதுல உன் தவற்றையெல்லாம் ஒப்புக் கொண்டு எழுதிக்குடுத்து கையெழுத்து போடு. இனிம எந்த தப்பும் செய்யமாட்டேன்னு என் கால்ல விழுந்து மன்னிப்புகேள். உன் ஒப்புதல் வாக்குமூலத்தை விடியோ வேற பண்ணப் போறேன்!"

"நானாவது என் குற்றங்களை ஒத்துக்கிறதாவது?"

"இல்ல.. சாகத்தயாரா இரு!" ரிவால்வரை மனோஜின் நெஞ்சுக்கு நேரே நீட்டினாள். "உனக்கு அஞ்சு நிமிஷம் டயம் தரேன். அதுக்குள்ள நீ நான்சொன்னதுக்கு ஒத்து வரலேன்னா தயங்காம சுட்ருவேன்!"

நேரம் கரைய ஆரம்பித்தது.

"வேணாம்.... விளையாடாதே... துப்பாக்கியை கீழே போடு!"

"முடியாது!" சேப்டி கேட்ச்சை விடுவித்தாள்.

"அறைக்கு வெளியே டிடக்டிவ் நிலாமகன் நின்னுக்கிட்ருக்கான். பத்திரம் எழுதாதே... விடியோ எடுக்காதே. நான் மன்னிப்புகேக்றேன்!"

"முடியாது!"

சோபியோவின் துப்பாக்கியை பறிக்க முயற்சித்தான் மனோஜ். விலகினாள் சோபியா. மீண்டும் மீண்டும் மனோஜ் துப்பாக்கியை கைப்பற்ற போராடினான்.

சோபியா மனோஜை எட்டி உதைத்தாள்.

சுருண்டான்.

"பைனல் கால்... எழுதிக் குடுப்பியா இல்லையா?"

சுருண்டிருந்த நிலையிலேயே சோபியோவை காலை வாரிவிட முயற்சித்தான்.

"ப்யூங்! ப்யூங்! ப்யூங்!" துப்பாக்கி தோட்டாக்களை ஸைக்கோ தனமாய் துப்பியது.

## 6

**சோ**பியாவின் நடு நெஞ்சைத்துளைத்துக் கொண்டு தோட்டாக்கள் முதுகின் வழியே வெளியேறின.

ஒரு வெதுவெதுப்பான வேகச்சுழல் இதயத்தின் தசைகளை துளைத்தது.

மனோஜ்குமாரின் கைகளிள் துப்பாக்கி இல்லையே... பின்னெப்படி தன்னைச் சுட்டான் என்கிற ஆச்சரியத்துடன்அவனை பார்த்தாள். அவனோ சுடப்பட்டதுதான்தான் என்கிறபவனையுடன் கண்ணிமைகளை இறுக மூடியிருந்தான். நெஞ்சில் இல்லாத காயத்தைத் துழாவியபடியே சோபியோவை உன்னித்தான் மனோஜ். சோபியோ ரத்த வெள்ளத்தில்.

"உ... உ... உன்னை யார் சுட்டது?"

யாரோ தொண்டையைச் செருமும் சப்தம் கேட்டது. திரும்பினான் மனோ. முகத்தில் மாஸ்க் மாட்டிக்கொண்டு ஒருவன் நின்றிருந்தான். "நான்தான் சுட்டேன்!"

"யார் நீ?"

"நானா? உன் கணினி பதிவுகளை அழித்தவன் – பாச்சாவைக்

## காற்று

செத்துப்போன சடலமாய்
நாறத் தொடங்கிவிட்ட
நகரத்துக் காற்றை
சுவாசிப்பனுக்குத் தெரியும்
கிராமத்துக் காற்று
உயிரோடு இருப்பதாக!
- பொதக்குடி வெற்றிமுரசு

கொன்றவன் – இப்ப உன் மனைவி சோபியாவை சுட்டவன் எல்லாம் நானே!"

"பாஸ்டர்ட்!"

"நான் உன்னை திட்ட வேண்டிய வார்த்தை... நான் ஏன் சோபியாவை சுட்டேன் தெரியுமா? எனக்கும் சோபியாவுக்கும் எந்த பகையும் இல்லை; உறவும் இல்லை. அவளைச் சுட்ட பழி உன் மீது விழ வேண்டும் என சுட்டேன்".

– சொன்னபடி மடிகணினியை மேலும் மும்முறை சுடான். கணினி பொசுங்கி எரிந்தது. சோபியாவின் கைபேசியை எடுத்துப் பதிவுகளை அழித்தான்.

"அடப்பாவி!"

"எதாவது சத்தம் போட்டாய் என்றால் உன்னையும் சுடுவேன். நான் கைல வச்சிருக்றது யார் துப்பாக்கி தெரியுமா?"

"தெரியலை!"

"நல்லா உத்துப்பார்... உன்னுடைய துப்பாக்கிதான்... நீ சுட்டால் என்ன உன் துப்பாக்கி சுட்டால் என்ன... ரெண்டும் ஒண்ணுதான்... சோபியாவின் துடிப்பு அடங்கிவிட்டது. இறந்துவிட்டாள். இனி நீ தாராளமாய் அஞ்சா வது திருமணம் செய்துகொள்ளலாம். எவளையாவது தயார்படுத்தி வைத்திருக்கிறாயா?"

மருத்துவர் சொன்னது நினைவுக்கு வந்தது. சமாதானம்!

"நீ யாரோ எவரோ. எனக்குத் தெரியாது. நான் உன்னிடம் பலவிதங்களில் தோற்றுவிட்டேன். நான் உனக்கு எதாவது ஒருவிதத்தில் தீமை செய்திருந்தால் மன்னித்து விடு. இனிமேல் உனக்கும் எனக்கும் மோதல் வேண்டாம்... பணம் கிணம் வேணுமா... வாங்கிக் கொண்டு ஒதுங்கிவிடு. சோபியாவை தற்காப்புக்காக சுட்டேன் என போலீஸுக்கு ஸ்டேட்மென்ட் குடுத்துவிடுகிறேன்!"

பகபகவென சிரித்தான் அவன். "இந்த சமாதான உடன்படிக்கையெல்லாம் எனக்கு பிடிக்காது. என்னைப் பற்றி நான் உனக்கு எதுவும் கூறவிரும்பவில்லை. ஐ வாண்ட் டூ மெயின்ட் தி ஸஸ்பென்ஸ் டு தி வெரி என்ட்..."

மனோஜ்குமாரின் அருகில் வந்தான். கையில் மயக்க மருந்து சிரின்ஜ் பூத்தது.

"முரண்டினால் சுடுவேன். கண்களை மூடிக்கொள்!"

மனோஜ் கண்களை மூட,

சிரின்ஜை சொருகி எடுத்தான் வந்தவன். மனோஜ் மயங்கினான்.

"பத்து நிமிஷத்துக்கு எந்திரிக்கமாட்ட!" துப்பாக்கியை துடைத்து மனோஜின் கைகளில் திணித்தான். பின் எழுந்தான். பின்பக்க கதவைத்திறந்தான். கதவைத்தள்ளி சாத்தினான். பால்கனி வழியே ட்ரைனேஜ் பைப்பைப் பிடித்து இறங்கி மறைந்தான்.

மறைக்குள் போன மனோஜ் – சோபியா திரும்பி வராததைக் கண்டு கதவு உடைக்கப்பட்டது.

நிலாவும் காவல்துறை அதிகாரிகளும் உள்ளோடினர்.

பிணமாய் சோபியா. மயக்கத்தில் மனோஜ்குமார்.

"வாக்குவாதம் முற்றி ஒருவரையொருவர் சுட முயற்சித்திருக்கின்றனர். மனோஜ் முந்திக் கொண்டார். மனைவி எதிர்பாரா கைகலப்பில் சுடப்பட்டு இறந்ததை உணர்ந்து மயங்கியிருக்கலாம் மனோஜ் அல்லது மயங்கியது போல் நடிக்கிறாரோ என்னவோ?"

மனோஜ்குமார் மயக்கம் தெளிவிக்கப்பட்டான்.

"என்ன நடந்தது?"

நடந்ததை திக்கித்திணறி விவரித்தான் மனோஜ்குமார். பின்பக்க கதவை தள்ளிக் கொண்டுபோய் பால்கனி எட்டினான் நிலா. வந்து போனதற்கான தடயம் காணக் கிடைக்கவில்லை.

"மனோஜ்! உங்களது கையிலிருந்து கைப்பற்றப்பட்டது உங்க துப்பாக்கித்தானா?"

"ஆமாம்!"

"தோட்டாக்கள் நிரப்பப்பட்டுதானே இருந்துச்சு?"

"ஆமாம்!"

"எங்க வச்சிருந்தீங்க?"

"இதே அறையின் இழுப்பறையில்!"

"வந்தவனுக்கு உங்களின் துப்பாக்கி இருக்குமிடம் எப்படி தெரியும்?"

"எப்டி தெரியும்னு எனக்கு தெரியல.."

"வந்தவன் எப்டி இருந்தான்?"

"அதிக உயரமும் இல்லை குள்ளமும் இல்லை. இளைஞன்தான். முகத்தில்

## தலவிருட்சங்கள் நிறைந்த மூலிகைத் தோட்டம்!

அக்பர்கவுஸர், புகழ்பெற்ற இயற்கை, யுனானி மருத்துவ வித்தகர் என்பதும், வாணியம்பாடியில் பிரம்மாண்டமான மருத்துவமனையை நிறுவி, மூலிகை மருத்துவம் மற்றும் அக்குபிரஷர்வைத்தியமுறைகள் மூலம் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தி வருவதும் நாடறிந்த செய்தி. காசினிக் கீரையைக் கண்டுபிடித்து, அதன் மூலம் கிட்னி பெயிலியர் போன்ற ஏராள நோய்களுக்கான மருந்துகளை உருவாக்கியும் புகழ்பெற்றவர் இவர். பரம்பரை வைத்திய முறைகளால் குடிகாரர்களைத் திருத்தி, மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கும் தொண்டினால் டாக்டர் அக்பர் கவுஸர், சமூகத்தின் கவனத்தை ஈர்த்தவர். இவரைப் பாராட்டாத சமூகப் பிரபலங்களே இல்லை எனலாம்.

மூலிகைகளின் அருஞ்சிறப்புகள் பற்றியும், அவற்றின் மருத்துவப் பயன்பாடுகள் பற்றியும் அரிய படங்களுடன் ஏராளமான கட்டுரைகளைப் பல்வேறு வார, மாத இதழ்களிலும் எழுதிக் குவித்தவர் டாக்டர் அக்பர்கவுஸர். அத்துடன் இவர் வாணியம்பாடியில், மிகப்பெரிய நிலப்பரப்பில், 'முகல் கார்டன்' என்னும் மூலிகைத் தோட்டம் ஒன்றையும் நிறுவி, ஏராளமான மூலிகைகளை வளர்த்து வருகிறார். இங்கு, தமிழ்நாட்டிலுள்ள இந்துக் கோவில்

---

*மாஸ்க் மாட்டியிருந்தான். குரலை மாற்றி பேச முயற்சிக்கவில்லை"*

*"தற்காப்புக்காகச் சுட்டு விட்டு புனைகதை சொல்கிறீர்களா?"*

*"பொய் கூறவில்லை!"*

*"தற்காப்புக்கா சுடுபவர் எதற்கு சோபியாவின் மடிகணினியை சுட வேண்டும்?"*

*"அதையும் செய்தவன் வந்தவன்தான்!"*

*"சோபியா தனது மடிகணினியில் ஏதோ ஏடாகூட விஷயங்களை எடுத்துவந்து உங்களிடம் விளக்கம் கேட்டிருக்கிறார். ஒரே நேரத்தில் சோபியாவையும் சோபியாவின் தகவல்களையும் அழித்தொழித்து விட்டீர்கள்!"*


*"இல்லை இல்லை இல்லவே இல்லை!"*

*காவல்துறை அதிகாரி, "மிஸ்டர் மனோஜ்குமார்! நீங்க கைது செய்யப்படுகிறீர்கள்!"*

*"நிலா! ப்ளீஸ் ஸேவ் மீ!"*

*"மனோஜ்! தற்சமய சூழ்நிலைக்கு நீங்க வெளில இருக்றதைவிட*

ஒவ்வொன்றிலும் 'தலவிருட்சம்' என்று புனிதமாகக் குறிப்பிடப்படும் அத்தனை மரங்களையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து வைத்து வளர்த்து வருகிறார். அக்பர் கவுஸரின் இந்த உயரிய பணியை மடாதிபதி களிலிருந்து சகல தரப்பினரும் பாராட்டி மகிழ்கின்றனர்.



இஸ்லாமியரான டாக்டர் அக்பர் கவுஸர் **'நோய்களைக் குணப்படுத்தும் இந்துக் கோவில் மரங்கள்'** என்னும் தலைப்பில், 887 பக்கங்களில் ஏராளமான படங்களுடன் மிகப் பெரிய நூல் ஒன்றை மணிமேகலைப் பிரசுரம் மூலம் ரூ.500 விலையில் வெளியிட்டுள்ளார். இதற்காக இவர் ஏராளமான இந்து ஆலயங்களுக்கு நேரில் சென்றும் தகவல் சேகரம் செய்துள்ளார். அத்துடன் இந்த நூலில் இவர், 'எங்கள் சொந்த ஊர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள நாராயணகுப்பம். இங்குள்ள இந்துக் கோவில் மரத்தடி பள்ளியில்தான் நான் ஆரம்பக் கல்வி கற்றேன்...' எனப் பெருந்தன்மையுடன் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவப் பணிகளால் மட்டுமின்றி, மனித நேயம் மற்றும், மத நல்லிணக்கத் தொண்டுகள் பல புரிந்தும் புகழ் பெற்றிருக்கும் அக்பர்கவுஸரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**- கௌதம நீலாம்பரன்**

---

*போலீஸ் காவல்ல இருக்றது பெட்டர்–நான் உங்களது வக்கீலுடன் வந்து தகுந்த நேரத்தில் ஜாமீன் எடுக்கிறேன்!"*

*மனோஜ்குமார் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டான்.*

*நிலாமகன் கண்களை குறுக்கி யோசனையில் ஆழ்ந்தான். காருக்கு நடந்து வரும் நிலாவை இடைமறித்தது கைபேசி*

*"ஹலோ!"*

*"ஹாய் நிலாமகன்!"*

*"யார் நீங்கள்?"*

*எதிர்முனை சிரித்தது.*

*"மனோஜ்குமாருடன் சதுரங்கம் ஆடும் விஸ்வநாதன் ஆனந்த் நான். ஆட்டத்தின் இடையில் தம்பட்டம் அடித்துக் கொள்வது எனக்கு பிடிக்காதுதான். ஆனா என்ன பண்ண? இப்போதெல்லாம் மூச்சுவிடுவதைக்கூட சப்தமாய் அறிவிக்க வேண்டி இருக்கிறது. மனோஜ்குமாரின் நாலாவது மனைவி சோபியாவைக் கொன்றுவிட்டு பழியை எப்டி மனோஜ் மீது சுமத்தினேன் பார்த்தாயா?"*

“உன் திறமையை பாராட்டுகிறேன். ஒரே ஒரு கேள்வி பதில் சொல்லு. உனக்கும் மனோஜ்குமாருக்கும் என்ன முன் விரோதம்? உனது குற்றநோக்கம்தான் என்ன?”

“தொடர்கதை படிக்கும்போது க்ளைமேக்ஸ் பக்கத்துக்கு முந்திரிக் கொட்டைத் தனமாய் ஓடாதே. வெயிட் அண்ட் ஸி தி ரிமைனிங் கேம்!”

நிலாமகன் காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

**ரெ**யின்போ டிஸ்டிரிபுயூட்டர்ஸ்.

குளிர்பதன மூட்டப்பட்ட அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தான் அவன். மாஸ்க்கை முகத்தில் மாட்டிக் கொண்டான்.

கதர்வேட்டி கதர் சட்டை அணிந்த பழமலை நிமிர்ந்தார். நெற்றியில் விபூதிபட்டையும் குங்குமமும்.

“யார் நீ?”

வந்தவன் துப்பாக்கியை உயர்த்தினான் “தேவையில்லாத கேள்விகளை நீ கேக்கக்கூடாது. எனக்குதான் கேள்வி கேட்கவும் பதில் பெறவும் உரிமை உண்டு!”

“இங்க திருட ஒண்ணுமில்ல தம்பி... பிலிம் சுருள்கள்தான் இருக்கு!”

“நடிகர் மனோஜ்குமார் நடிப்பைப் பற்றி உன் கருத்தென்ன?”

“இப்ப யார் வேணாலும் நடிக்கலாம். ராஜ்கிரண், சேரன் எல்லாம் நடிக்க ஆரம்பிச்ச பிறகு தமிழ்நாட்டின் ஆறரை கோடி மக்களும் உறீரோ உறீரோயின் ஆய்ட்டாங்க. மனோஜ் குமார் எனக்கு பிடிச்சா என்ன, பிடிக்காட்டி என்ன? அவனது படங்கள் மினிமம் கேரன்டி ஓடுதே... திட்டிக்கிட்டே மக்கள் படம் பாத்துக்கிட்டுதான் இருக்காங்க!”

“மனோஜ்குமாரின் பழைய படங்களின் வோல்ட் ரைட்ஸ் எத்தனைக்கு வாங்கிவச்சிருக்க?”

“முப்பத்திரெண்டு படம் என் கைவசமிருக்கு. பிக் டிவி, டிஷ் டிவி, சன் டிடி ஹெச், டிஜிடெல் எல்லாம் பேசிக்கிட்டுருக்காங்க!”

“அவங்க எல்லாருக்கும் ஒரு பேக்ஸ் தகவல் அனுப்சிருக்கேன்!”

“என்னன்னு?”

“மனோஜ்குமாரின் படங்களை வாங்கிப் போட்டீங்கன்னா விளைவுகள் விபரீதமாயிருக்கும்னு அவங்களை வார்ன் பண்ணியிருக்கேன். அவங்களும்

பயந்து ஒதுங்கி நிற்கிறாங்க!"

"எதுக்கு தம்பி இந்த வெட்டி வேலையெல்லாம்... ஓடாத படங்களின் தயாரிப்பாளர்கள் விநியோகஸ்தர்கள் எல்லாம் சாட்டிலைட் சானல்களைத்தான் மலை போல நம்பியிருக்காங்க. சன் டிவியெல்லாம் நேரடியா படங்களை வாங்கி ரிலீஸ் பண்றது எவ்வளவு ஆரோக்கியமான விஷயம் தெரியுமா? உனக்கும் மனோஜ்குமாருக்கும் என்ன பிரச்சனை? சொல்லு... பேசி தீர்த்து வைக்றேன்... சினிமா தொழில்ல எனக்கு 35 வருஷ அனுபவமிருக்கு"

வந்தவன் ஓடிப்போய் பழமலையின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை பொருத்தினான்.

"அட்லைஸ் மழை பொழியாதே. நானும் மனோஜ்குமாரும் ஒரே

## தூறல்

முதுகை உரசி
அரிப்பைத் தணிக்கின்றன
மந்தை ஆடுகள்...
கசாப்புக் கடைக்காரனின்
கல்லறையில்!

- பொதக்குடி வெற்றிமுரசு

நம்பிட்டியா பெருசு? அப்டி யெல்லாம் காரணம் சொல்ல ஆசைதான். ஆனா உண்மை அப்டி இல்லையே?"

"உண்மைதான் என்ன?"

"அதை உனக்கு சொல்ல அவசியம் இல்லை. உனக்கு உன் உயிர் முக்கியம்னா ஒண்ணு செய்... மனோஜ்குமாரின் 32 படங்களின் மாஸ்டர் பிரிண்ட்களை எனக்கு முன்னாடி கொளுத்தி சாம்பலாக்கு".

பொண்ணை காதலிச்சம். அவளை மனோஜ் சினிமா ஆசைகாட்டி என்கிட்டயிருந்து பிரிச்சிட்டான். அவ மனோ படத்ல உரிரோயினா நடிச்சபிறகு என்னை சுத்தமா கைகழுவிட்டா. காதலியை பறிச்சிட்டானேன்ற வெறில மனோஜை பழி வாங்குகிறேன். என்ன நான் சொல்ற கதை பொருந்தி வருதா?"

உங்க காதலியின் உண்மையான பெயர் என்ன, சினிமா பெயர் என்ன?"

வந்தவன் விழுந்து விழுந்து சிரித்தான். "நான் சொன்னதை

"அது என் தற்கொலைக்கு சமம். என்னுடைய பலகோடி முதலீட்டை நானே எரிச்சு சாம்பலாக்குவதா? ப்ளீஸ்... உன் கால்ல வேணாலும் விழுறேன்... இந்த விபரீத யோசனையை விட்டு!"

"எனக்கு லாப - நஷ்டக் கணக்கு தேவையில்லை. எரிக்கிறாயா, சாகிறாயா?"

பழமலை மேஜை இழுப்பறை யிலிருந்து பிச்சுவா கத்தி எடுத்து வந்தவனின் துப்பாக்கி மீது வீசினார். கத்தி மடக்கிய விரல்களில் குத்தி நின்றது. துள்ளத்துடித்தான்

வந்தவன். துப்பாக்கி கீழே விழுந்தது. அழைப்புமணியை அமுக்கப்போகும் பழமலை மீது பாய்ந்தான் வந்தவன். இரண்டு பேரும் உருண்டு புரண்டனர்.

"கிழவன்னு என்னை நினைச்சியா? நான் சாண்டோ சின்னப்பா தேவர் மாதிரி... உருட்டுக்கட்டை உடம்பு!"

பழமலை மீது ஏறி அமர்ந்தான் வந்தவன். எட்டி துப்பாக்கியை கையில் எடுத்தான். பழமலையின் முழங்காலில் சுட்டான். ப்யூங்!

மேற்தோலும் சதையும் பிய்த்துக்கொண்டு போக இரத்தம் பெருகியது.

"அடுத்ததடவை சுட்டா உன் நெஞ்சிலதான் சுடுவேன்... எதிர்த்து வாயாடாம பிலிம்சுருள்களை எடுத்து வந்து எரி!"

"எல்லாவற்றையும் ஒரே நேரத்ல தூக்கி வரமுடியாது. ஸ்டோர் அறை முழுக்க இருக்கு!"

"வா. ஸ்டோர் ரூமுக்கு போவம். வழில அண்டுமுண்டுதனம் பண்ணாதே!"

இருவரும் குளிர்பதன மூட்டப்பட்ட அறையை விட்டு வெளியே வந்தனர். "உன்னுடைய ஆட்களை எல்லாம் தலைக்கு பின்னாடி கையை கட்டிக்கிட்டு முழங்கால் போடச் சொல்லு!"

"போடுங்கடா!" இரைந்தார் பழமலை.

முழங்காலிட்டனர்

பிலிம் சுருள்கள் பாதுகாக்கும் அறைக்கு வந்த சேர்த்தனர். "யாரையாவது ஒரு பத்துலிட்டர் கேரஸின் அல்லது பெட்ரோல் எடுத்திட்டு வரச்சொல்லு!"

பழமலை கதறியழுதார். "வேணாம்ப்பா... என்னையும் என் பிலிம் சுருள்களையும் விட்டுருப்பா!"

"இந்த அழுகைக்கெல்லாம் மயங்கிறவன் நானில்லை!"

பெட்ரோல் வந்தது. "பிலிம் சுருள்களை எடுத்துப் போட்டு தீ வைங்கப்பா!"

பிலிம் சுருள்களை குடலை உருவுவது போல உருவி குவித்து பெட்ரோல் ஊற்றி தீ வைக்கப்பட்டது. ஜ்வாலை பல்வர்ண மாய்மாலம் காட்டி எரிந்தது.

எல்லா பிலிம்சுருள்களும் எரிந்து சாம்பலானதை மகிழ்ச்சியாய் பார்த்த வந்தவன் அங்குமிங்கும் இலக்கில்லாமல் சுட்டபடி தனது பைக்குக்கு ஓடி ஸ்டார்ட் செய்தான்.

பைக் சீறிச் சினந்தது. தெரு முடிவில் காவல்துறை வாகனங்கள் வந்து சேர்ந்தன.

துப்பாக்கிகள் குரைத்தன. வந்தவன் காவல்துறை வாகனங்களுடன் ஒரு மணிநேர கண்ணாமூச்சி ஆடிவிட்டு காணாமல் போனான்.

## 7

மனோஜ்குமாரின் பண்ணை வீடு. ராட்சச டிஷ் ஆன்ட்டெனா வீட்டின் மொட்டை மாடியில் வான் பார்த்தது. பண்ணை வீடு நடுவில் இருக்க, சுற்றிலும் தோட்டம். தோட்டத்தில் சொட்டு நீர் பாசனக்குழாய்கள் சுழன்று கொண்டிருந்தன. கிணறும் பம்பு செட்டும் காட்சி அமைப்புக்குள் கம்பீரம் கூட்டின.

அவனது கார் பண்ணை பங்களாவின் வெளிவாசலை முட்டி சிதற்றி விட்டு உள் பாய்ந்தது. பண்ணை ஆட்களை துப்பாக்கி முனையில் வாயில் பிளாஸ்திரி ஒட்டி கைகால் கட்டி பம்பு செட்டுக்குள் தள்ளினான்.

புல்டோஸர் வைத்து ஒட்டுமொத்த பண்ணையை நாசமாக்கினான். வீட்டை இடித்து தள்ளினான்.

ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் சிதறி ஓடின.

கிணற்றின் பேரபெட் சுவற்றை இடித்து தள்ளினான்.

ஏறக்குறைய வந்தவன் ஆறுமணிநேரம் ருத்ரதாண்டவம் ஆடி முடித்தான். புல்டோஸரை பண்ணைக்கு வெளியே ஒரு புளியமரத்தில் மோதி நிறுத்திவிட்டு தனது காரில் ஏறிப் பறந்தான்.

தனது மறைவிடத்துக்கு வந்துசேர்ந்தான் அவன். காரின் பதிவெண்ணை மாற்றினான். தனது அறைக்குள் பிரவேசித்தான். அறை சுவர் முழுக்க சினிமா ஹீரோக்களின் ப்ளோ அப்புகள்.

உலகின் அனைத்து புகழ் பெற்ற உறீரோக்களும் டைரக்டர்களும் புகைப்படங்களாய்.

சாட்டிலைட் டிவியை ஆன் செய்தான். ஒரு ஈரானியன் படம் ஓட ஆரம்பித்தது. ஒரு பர்கரை தின்று, கோக் குடித்தான்.

அறை முழுக்க டிவிடிகள் இறைந்து கிடந்தன.

| | |
|---|---|
| Curious case of Benjamin Button | gone with the wind |
| Burn after reading | Milk |
| Mamma mia | vicky christina Barcelona |
| Valkyrie | Mackennas gold |
| Seven pounds | Reaer |
| Alfred Hitchcock collections | Frost |

ஒரு பேடை எடுத்தான். அதில் மனோக்குமாரின் புகைப்படம் ஒட்டப்பட்டிருந்தது. மனோஜ்குமாரைச் சுற்றி பல தகவல்கள் எழுதப்பட்டிருந்தன.

*1. மனோஜ்குமாரின் ஒட்டுமொத்த தகவல் தொடர்பு*

*2. மனோஜ்குமாரின் மேனேஜர் பாச்சா*

*3. மனோஜ்குமாரின் தற்போதைய மனைவியை கொல்தல்*

*4. மனோஜ்குமாரின் நகராசொத்துகளை அழித்தல்*

*5. மனோஜ்குமாரின் காப்பிரைட் படங்களை அழித்தல்*

பட்டியல் பதினைந்து பாயின்ட்கள் வரை நீண்டிருந்தன. கைபேசியை கையில் எடுத்து ஒரு பத்து இலக்க எண்ணை அமுக்கினான்.

எதிர்முனை உயிர்த்தது.

"நான் மிஸ்டர் எக்ஸ் பேசுகிறேன். நீ நடிகை ஏன்ஜலிகாதானே?"

"ஆமாம்!"

"மனோஜ்குமாரின் படத்தில் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருக்கிறாய் தானே?"

"ஆம். கடந்த இரண்டு வாரங்களாக ஷூட்டிங் நடக்கவில்லை!"

"சொல்வதை நன்கு கவனி.... வாங்கன அட்வான்ஸை திருப்பிக்குடுத்து விடு. மனோஜ்குமார் படத்தில் நீ நடிக்கக்கூடாது!

"நடித்தால்?"

"நடித்தால் ஈவு இரக்கமில்லாமல் கொல்லப்படுவாய்!"

"நான் நடிக்காவிட்டால் எனக்கு லட்சக்கணக்கில் நஷ்டமாகுமே... நீங்க ஈடுகட்டுவீர்களா?"

"அதற்கு வேற ஆளைப் பாரு! இன்னுமொரு விஷயம் கவனி. மனோஜ் குமாருடன் நடித்துக் கொண்டிருக்கும் நடிக்க புக் ஆகியிருக்கும் அனைத்து நடிகைகளுக்கும் என் அச்சுறுத்தலை பார்வர்டு பண்ணிவிடு. ஆம்பிளைகள் கூட பொம்பிளை வேஷம் போட்டுக்கிட்டு அவன் கூட ஜோடியா நடிக்கக் கூடாது"

"நீங்கமிரட்டுவதைபோலீஸுக்கும் நடிகர் சங்கத்துக்கும் தெரிவிப்பேன்!"

"தெரிவி... எனக்கு பயமில்லை!"

"எனக்கு ரெட் கார்ட் போட்ருவாங்க!"

## தாய்

நிலவு காட்டி,
காக்கையைக் காட்டி
சோறூட்டி வளர்த்த
தாயை...
தாரத்தைக் காட்டி
சோற்றுக்காக
வெளியே
விரட்டினான் மகன்!

- போளூர் சி.ரகுபதி

"மனோஜ்குமாருக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"டெட் கார்டை விட ரெட் கார்டு பரவாயில்லை!"

"இதெல்லாம் ஏன் செய்ற?"

"நான் ஒரு படத்தில் உஹீரோவா நடிக்க இருந்தேன். அந்த வாய்ப்பை திட்டமிட்டு கெடுத்து விட்டான் மனோஜ்குமார் - அப்டின்னு சொல்வேன்னு பாத்தியா?" பகபகவென சிரித்தான் அவன். கைபேசியை ஆப் செய்தான். ரிமோட் எடுத்து சானல் மாற்றினான். சன் நியூஸ் ஓடிக்கொண்டிருந்தது.

மனோஜ்குமாரின் முதல் (முன்னாள்) மனைவி கண்ணீரும் கம்பலையுமாய் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"சினிமாக்குள்ள வரும்வரை அவர் நல்லவராய்தான் இருந்தார். சினிமாவுக்குள் புகுந்ததும் அவருக்குள் பணத்தாசை புகழாசை பெண்ணாசை புகுந்து கொண்டு விட்டது. அவர் கொலைகாரர் அல்ல. காரணம் அவர் நல்லவர் என சொல்ல மாட்டேன். அவர் ஒரு கோழை. அவருக்கும் எனக்கும் இருந்த கணவன் மனைவி உறவு அறுந்துவிட்டது. இருந்தாலும் விட்டக்குறை தொட்டக்குறையாக அவர் மீது ஒரு இரக்கம் துளிர்க்கிறது. ஒளிந்திருந்து அவரை நிர்மூலமாக்கும் கொலைகாரனின் கால்களைப் பிடித்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்... எனக்காக எனது முன்னாள் கணவரை விட்டுவிடு. போதும் தாங்க மாட்டார்!"



**தி**ருவண்ணாமலையை
கிரிவலம் வரப்பெறும் வழி
விக்ரமபாண்டியன் வீதி என
வழங்கி வருகிறது. இதனைப்
பத்துப் பிரிவுகளாக்கி
இவ்வழியின் தூரத்தைக்
காட்டுவதற்காகக்
கற்களை நட்டுள்ளனர்.
இக்கற்களில் இரண்டு
மீனும் ஒரு செண்டும்
பொறிக்கப்பட்டுள்ளன.
இந்தியாவில் முதன்முதலில்
கண்டுபிடிக்கப்பட்ட மைல்
கல் இதுவேயாகும்.

**- க.ரவீந்திரன்**

"கொலைகாரன் உங்க அனுதாபி என்கிறார்கள்!"

"அனுதாபி என்றால் உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.... மனோஜை வாழ விடு!"

"மீண்டும் உங்களை அவர் மறுமணம் செய்துகொள்ளக்கூடும் என நம்புகிறீர்களா?"

"எந்த சந்தர்ப்பத்திலும் மனோஜை மறுமணம் செய்து கொள்ளமாட்டேன்"

"பேட்டிக்கு நன்றி!" சானலை மீண்டும் மாற்றினான் அவன்.

"அனுதாப அலை மூலம் தப்பிக்க பார்க்கிறாயா மனோஜ்? அது நடக்காது. அடுத்தடுத்த பேரிடிகளை உன் தலை மீது இறக்குவேன். தயாராய் இரு!" சிரித்தான். "என்ன நான் சொல்றது சரிதானா அல் பஸினோ?"

ரிவால்விங் மாடல் சேரில் சரிந்து அமர்ந்திருந்தான் நிலாமகன். அவனுக்கு எதிரே மேகா நின்றிருந்தாள்.

"நான் கடவுள் பார்த்தாயா நிலா?"

"பார்த்தேன்!"

"என்ன தோணுச்சு?"

"கோடிக்கணக்கான மக்களை பட்டினி போட்டுட்டு நாம சுகபோகமா வாழுறோமோன்னு ஒரு குற்ற உணர்ச்சி தோணுச்சு. நரகம் தனியா இல்லை. நாம வாழுற பூமிலயே இருக்குன்னு புரிஞ்சது. அழகன் தமிழ்மணி, கிருஷ்ணமூர்த்தி விக்கிரமாதித்யன். சிங்கம் புலி நடிப்பு அபாரம். தமிழ் சினிமாவை இன்னொரு பரிமாணத்துக்கு தூக்கிட்டுப் போய்ட்டார் பாலா. இந்த மாதிரி படங்கள்ல நடிக்க ஆர்யா மூணுவருஷமில்ல முப்பது வருஷம் காத்திருக்கலாம்!"

"கம்மிங் பேக் டு தி பாய்ன்ட்... மனோஜ்குமார் கேஸ் எவ்வளவு தூரத்தில் இருக்கு நிலா?"

"மனோஜ் ஜாமீன்ல வர விரும்பவே இல்லை. இப்ப அவரை போலீஸ் ஒரு இரகசிய இடத்ல பாதுகாப்பா வச்சிருக்கு!"

"இன்னொருமுக்கியமானவிஷயம்...மனோஜ்தனக்களிக்கப்பட்டஸ்டேட் சென்ட்ரல் பிலிம்பேர் அவார்டுகளை திருப்பிக்குடுத்துவிட்டார்!"

"ஏன்?"

"இதுவும் கொலையாளியின் விருப்பத்துக்காக!"

"கொலையாளி பத்தி எதாவது முக்யமான தடயத்தை மோப்பம் பிடிச்சாயா நிலா?"

"யெஸ்!"

"என்ன தடயம் நிலா?"

"டிஸ்டிரிப்யூட்டர் ஆபிசில் கொலையாளி மனோஜின் பழைய படபிலிம் சுருள்களை எரிச்சான் அல்லவா? அங்கு ஒரு கிழிந்த அட்டை கிடைச்சது"

"என்ன அட்டை?"

"பிக் டிவி கேஷ்கார்டு அட்டை!"

"அட்டையின் எண் என்ன?"

"304 289 262 881"

"கேஷ்கார்டு அட்டைன்னா ரீசார்ஜ் கார்டு மாதிரிதானே?"

“ஆமா!”

“அதனை வைத்து வாடிக்கையாளரைக் கண்டுபிடிக்க முடியுமா?”

“முடியும்... 1800-200-9001 அல்லது 1800-200-9002 டோல் ப்ரீ நம்பருக்கு போன் செய்து வாடிக்கையாளரின் சந்தா எண்ணைக் கண்டுபிடிக்கலாம்!”

“ஓவ்! கண்டுபிடிச்சீங்களா?”

“வாடிக்கையாளரின் பெயர் ஆனந்த கீதன். எண் 200 507 461629 தொலைபேசி எண் 9442737404 இதில் வாடிக்கையாளரின் பெயர் போகஸா இருக்கலாம். தொலைபேசி எண் கூட டெம்பரரி ஒன்தான்!”

“தென்?”

“குளோபல் பொஸிஷன் சிஸ்டத்தை வைத்து கொலையாளியின் தோராய இருப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட்டேன்!”

“கொலையாளி எங்கிருக்கிறான்?”

“சென்னையின் சிட்டி மேப்பை எடுத்து வா மேகா!”

எடுத்து வந்தான். சென்னையின் சிட்டிமேப்பில் கொலையாளி இருக்குமிடத்தை புள்ளி குத்தினான் நிலா.

“ஆளை சுற்றி வளைக்க வேண்டியதுதான்!”

“பிக் டிவி கார்டு வேறொருவருக்கு சொந்தமானதாய் இருந்தாலும் இருக்கலாம். ஒன் வீக் பாலோ அப் அண்ட் தென் ரவுண்ட் அப்!”

“ஒரு வாரம் காத்திருந்தீர்கள் என்றால் மனோஜ்குமாருக்கு இன்னொரு க்ரைமை செய்துவிடப் போகிறான் கொலையாளி!”

“வி ஆர் கேர்ஃபுல்!”

சிரித்தாள் மேகா.

“மப்டி போலீஸ் கொலையாளி தங்கியிருக்கும் பங்களாவை கண்காணித்து வருகிறது. இனி ஒவ்வொரு அசைவும் கொலையாளி எங்களின் தலையாட்டல் இல்லாமல் செய்ய முடியாது. நான்கைந்து பாயின்ட்களில் கொலையாளி பைனாக்குலர் மூலம் வேவு பார்க்கப்படுகிறான். அவன் எதற்காவது வெளியில் வருவான் இல்லையா? அந்த நேரத்தில் அவனை புகைப்படம் எடுக்கவும் சொல்லி இருக்கிறேன்!”

“ரைட்டோ ரிலாக்ஸ் யுவர் ஸெல்ப் சமீபத்ல என்னென்ன ஆங்கிலப்படங்கள் பார்த்த நிலா?”

“ஸ்லம்டாக் மில்லியனர் பார்த்தேன். பிடிக்கல. படம் இந்தியாவை இழிவா காட்டுது. ஏ.ஆர்.ரகுமான் தனது தமிழ் படங்களில் செலவிடும் உழைப்பில் பத்து சதவீதம் கூட ஸ்லம் டாக்குக்கு செலவழிக்கல. ‘அவுட்ஸோர்ஸ்டு’னு ஒரு படம் என் ஆர் ஐ எடுத்தது. இண்டியாவை குளோரிபை பண்ணுது!”

“தென்?”

“ராபின் குருஸோ படம் பார்த்தேன். அதில் ஆதிவாசியாய் நடித்த பிரைடே என்கிற கேரக்டரின் நடிப்பு அபாரம். ஜான் ரீனோ நடிச்ச ‘ப்ளை பாய்ஸ்’ பார்த்தேன். ஒரு டைட்டானிக் படம் பார்த்த திருப்தி. முதலாம் உலகப் போரில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து எடுத்த படம். லூலியானா கேரக்டர் எக்ஸலன்ட். ‘டான் இன் ரியல் லைப்’ நல்ல காமெடி. ‘பர்ஸ்ட் ஸைட்’னு ஒரு படம். வால் கில்மரும் மிராவும் நடிச்சது. டெரிபிக் மூவி. ஹாலிவுட் படங்கள் நமக்கு ஒரு உண்மையைச் சொல்லுது!”

“என்ன உண்மை?”

“எந்த நிகழ்ச்சியையும் படமாக்கலாம் என்கிற படைப்பு சுதந்திரம் ஹாலிவுட் மற்றும் ஈரானியன் பிரஞ்ச் படைப்பாளிகளுக்கு உள்ளது. இங்கில்லை. பத்து ட்ராஷ் வந்தால் ஒரு சுமார் படம் ஜெயிக்கிறது. நூறு சதவீதம் கல்வியறிவும் அறிவுத்திருட்டு தொடர்பான விழிப்புணர்வும் நம் மக்களுக்கு தேவை!”

கைபேசி சிணுங்கியது.

எடுத்தான் நிலா.

“ஹலோ”

ஹலோ... நான் காவல்துறை கண்காணிப்பாளர் பேசுகிறேன்!”

“சொல்லுங்கள்!”

“உத்தேச கொலையாளியின் புகைப்படத்தை உங்களுக்கு விடியோ மெயிலில் அனுப்புகிறோம்... பாருங்க. அதன்பின் மேல் நடவடிக்கையை கலந்தாலோசிப்போம்!”

மடிகணினியில் புகைப்படங்கள் தெரிந்தன. ஒரு குறிப்பிட்ட புகைப்படத்தின் முகத்தை Zoom பண்ணி டைட் குளோஸப்புக்கு போனான் நிலா. “ஐ வில் ட்ராப் யூ பாஸ்ட்ரட்!”

# 8

மடிப்பாக்கத்தின் ராகவன் நகர்.

காரில் அமர்ந்தபடி அவனை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான் நிலாமகன். அந்த இளைஞனுக்கு வயது 28 இருக்கக்கூடும். செக்கச் செவேலென்று ஆறடி உயரத்தில் ஹிரித்திக் ரோஷன் போல இருந்தான். கண்களில் குளிர் கண்ணாடி அணிந்திருந்தான். அவனின் கடந்த பத்து மணிநேர நிகழ்ச்சி நிரல் இதோ.

காலை 5.30 மணிக்கு எழுந்தான். யோகா செய்தான். ஸ்கிப்பிங் 200 ஆடினான். நிலவேம்பு கசாயம் குடித்தான். காலை உணவாக பழத்துண்டுகள் கலந்த கெல்லாக் சாப்பிட்டான்.

டிவியில் டிஸ்கரி சேனலின் ட்ராவலிங் அண்ட் லிவ்விங் ஓடிக் கொண்டிருந்தது.

ஆங்கில தமிழ் தினசரிகளை வாசித்தான்.

வளர்ப்பு நாய் ஹஷ் எடுத்து கொஞ்சினான். தலைவாரும் சீப்பை வைத்து நாயின் ரோமத்தை வாரி விட்டான். அதற்கு நாய் உணவு புகட்டினான்.

காய்கறிக் கூடை எடுத்துக் கொண்டு மார்க்கெட்டுக்கு புறப்பட்டான். ஒரு சமையல் கலை நிபுணன் தேர்ந்தெடுத்து தேர்ந்தெடுத்து காய்கறிகள் வாங்குவது போல வாங்கினான்.

காதுகளில் வாக்மேன் மாட்டியிருந்தான்.

வீடு திரும்பினான். ஜீ ஸ்டுடியோவில் படம் பார்த்துக் கொண்டே சமையல் பண்ண ஆரம்பித்தான்.

சமையல் முடித்ததும் கம்ப்யூட்டரில் முன் அமர்ந்து எதனையோ டிடிபி செய்தான்.

மதியம் சாப்பிட்டான். டிவியில் ஃபாக்ஸ் ஹிஸ்டரி சேனல் ஓடியது. உணவுக்குபின் ஒரு மணிநேர குட்டித்தூக்கம் போட்டான். பின் எழுந்து சிஎன்என்னில் செய்தி பார்த்தான். பின் மேஜையிலிருந்த மின் உபகரணங்களை நோண்ட ஆரம்பித்தான்.

மாலை ஸோனி பிக்ஸ் ஓடியது. ஆறுமணிக்கு 'மீராபாய் நாட் அவுட்' பார்த்தான். மேஜையில் கிடந்த இருபது முப்பது செல்போன்களை பழுது பார்க்க ஆரம்பித்தான். கையில் துப்பாக்கியுடன் கதவை

உடைத்துக்கொண்டு புயல்வேகத்தில் பாய்ந்தான் நிலாமகன் ‘ஃப்ரீஸ்!”

அந்த இளைஞன் நிலைகுலைந்து போனான் “யா... யார் நீங்க?”

“உன் பெயர் ஆனந்தகீதன் தானே!”

“ஆமா!”

“தலையில் முழங்காலிட்டு உனது இரு கைகளை பின்னங்கழுத்தில் கோர். எதாவது சாகசம் செய்ய முயன்றாய் என்றால் நடுநெஞ்சில் சுடுவேன். என்கவுன்ட்டர் மரணங்களில் ஒன்று கூடிப்போகும்!”

## ‘செல்’லம்மா!

“செல்”லம்மா... செல்லம்மா
இன்று உன் நிலை என்னம்மா?
ஒரு கையால் வண்டி ஓட்டி, ஒரு கையில்
உன்னைப் பற்றியபடி நீ சொல்லும் செய்தியை
காதில் வாங்கிய மகிழ்வில் உனக்கு முத்தம்
தந்தபடி தன்னை மறந்து சிரித்து வருவார்.
எதிர்வரும் வண்டியும், இவர் வண்டியும்
கட்டித் தழுவும்... டமார்...
தழுவிய வண்டியும் தூளானது
வண்டியில் வந்தவரும் கூழானார்
“செல்”லம்மா நீ எங்கே சென்றாய் சொல்லம்மா.

- அமுதவல்லி இராகவசாமி,
காரைக்கால்

“வினாயகப் பெருமானே.... என்னைக் காப்பாத்து!” இளைஞன் முழங்கா லிட்டான்.

பக்கத்தில் போய் முகத்தில் ஒரு குத்து வெடித்தான் நிலா. “எதுக்கடா மனோஜ்குமாருக்கு தொடர்ந்து தொந்திரவுகள் தந்த? உனக்கும் அந்தாளுக்கும் என்ன பகை?”

“எந்த மனோஜ்குமார்?”

“நடிக்காதே. நடிகர் மனோஜ்குமார்!”

“அய்யோ அந்த ஆளை எனக்கு பிடிக்காது. அந்தாளு படமே பாக்கமாட்டேன். எதுக்கு அவரைப் போய் தொந்திரவு பண்ணப் போறேன்?”

“முரண்பாடான பதில்... மனோஜ்குமாரின் மேனேஜரையும் மனைவியையும் அநியாயமா கொன்னிருக்க. மனோஜ்குமாரை சகலவிதத் திலும் டி–மாரலைஸ் பண்ணிருக்க!”

“தவறான விலாசத்துக்கு வந்திருக்கீங்க. ஈ எறும்பைக் கூட கொன்னது இல்லை நான்!”

“உன் தரப்பு நியாயத்தை சொல். உனக்கு சொந்த ஊர் எது?”

“ஆரணி!”

“உனது பெற்றோர்கள் என்ன செய்கின்றனர்?”

“அப்பா மளிகைகடை

அடுத்த சிமிழ்
லட்சுமிராஜரத்னம் எழுதிய
நெஞ்சே... நெஞ்சே... நீ எங்கே...?
உங்கள் உள்ளம் தொடும் உன்னதமான குடும்ப நவீனம்

வைத்திருக்கிறார். அம்மா ஹவுஸ் மேக்கர்!"

"இங்கு என்ன செய்கிறாய்?"

"மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் பிஹெச்டி ரிசர்ச் ஸ்காலரா இருக்கேன்!"

"என்ன தலைப்பில் ஆராய்ச்சி செய்கிறாய்?"

"நான் சமூகவியல் மாணவன். 'செயற்கைக்கோள்

அதற்காக ஆறுமாத பயிற்சி ஏற்கெனவே எடுத்திருக்கிறேன்!"

விசாரணை தொடர்ந்தது. தான் தேடிவந்தது அவனை அல்ல என்பது அப்பட்டமாக நிலாவுக்கு தெரிந்தது. இருந்தாலும் அவனை பல கோணங்களில் புகைப்படம் எடுத்துக்கொண்டான். அத்துடன் அவனது ஸ்பெஸிமன் ரேகைகளை சேகரித்து கொண்டான்.

"கீதன்! உனது இருப்பிடத்தை சோதிக்க சர்ச் வாரண்ட் தேவை... என்னிடம் இல்லை. நீ நிரபராதி என்றால் உனது வீட்டை முழுதும் சோதிக்க அனுமதி!"

"சோதித்துப் பாருங்க சார். எனக்கு பிரச்னையில்லை. என்ன – பத்து பதினைஞ்சு டேபோனர் இஸ்யூக்கள் ஒளித்துவைத்திருப்பேன் – அவ்வளவுதான்!"

"உன்னுடைய பிக் டிவி கேஷ்கார்டு எப்படி டிஸ்டிரிப்யூட்டர் ஆபிசில் கிடந்தது?"

அலைவரிசைகளும் தமிழர் பண்பாடும்' என்ற தலைப்பு"

"உனது அடையாள அட்டையைக் காட்டு!

காட்டினான்.

"செல்போன்களை தோண்டிக் கொண்டிருந்தாயே?"

"செல்போன்களைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தேன். பழுதுபார்க்க எனக்கு தெரியும்

"தெரியல சார். உங்களை மிஸ்லீட் பண்ண கொலையாளி போட்டானோ என்னவோ?"

நடிகர் மனோஜ்குமார் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"அவர் நடிகர் அர்ஜுன் போல. அவருக்கென்று ரசிகர்கள் கிடையாது. அவரின் படங்களுக்கு பெரிதாய் எதிர்பார்ப்பும் இராது. ஆனாலும் அவர் படங்கள் ஓரளவு ஓடிவிடும். இந்த வயதிலும்

சிக்ஸ்பேக் உடம்பு வைத்திருக்கிறாரே என்ற பொறாமை எனக்கு உண்டு!"

நிலாவின் கைபேசி அழைத்தது. எடுத்தான் எதிர்முனை கரகரப்பாய் சிரித்தது. "என்ன பிக்டிவி கேஷ்கார்டு பாத்து எவனையோ பிடிச்சு உலுக்ற போல. இம்மெச்சூர் அண்ட் அமெச்சூர் டிடக்டிவ்!"

"தாங்க்யூ ஃ பார் யுவர் காம்ப்ளிமென்ட்!"

"நிலா... உன்னை பாக்க பாவமாயிருக்கு. ஒரே ஒரு க்ளூ தரேன். அத வச்சு என்னை பிடிக்கப் பாரேன்!"

"என்ன க்ளூ!"

"ஒரு வார்த்தைல பாதி GRAP முழு வார்த்தையை கண்டுபிடிச்சு அதோட என்னையும் நடிகர் மனோஜ்குமாரையும் சம்பந்தப்படுத்தி பாரு. நான் யாருன்றது தெரியும். பெஸ்ட் ஆஃப் லக்!"

எதிர்முனை மரித்தது.

GRAP எனும் துண்டுவார்த்தை வைத்துக்கொண்டு ரக்பி ஆட ஆரம்பித்தான் நிலாமகன்.

## 9

மேகா இரு கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு நிலாவை உன்னித்தாள்.

'GRAP' என்பது முன்னும் பின்னும் முடிவடையாத வார்த்தை!" என்றான் நிலா.

'GRAP' க்கு பின் 'பி' சேர்க்க வேண்டும் 'GRAP' முன்னால் என்ன எழுத்துகளை சேர்க்கலாம்?"

"POLYGRAPH/ CALICO GRAPH/ AUTOGRAPH/ BIOGRAPHY/ AUTOBIOGRAPHY இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் நிலா"

"மனோஜ்குமார் நடிகர். நடிகருக்கு சம்பந்தப்பட் வார்த்தை எது?"

"ஆட்டோகிராப்!"

"யெஸ் கொலையாளி நமக்கு சொல்ல நினைத்த வார்த்தை 'ஆட்டோகிராப்' ஆட்டோகிராப் என்ற வார்த்தையில்தான் அனைத்து சூட்சமங்களும் அடங்கியுள்ளன!"

"வாவ்!"

**பிழைப்பு**

பூக்கூடையுடன்
கோயில் வாசலில்
வயிற்றுப் பிழைப்புக்காக
விதவை!

- போளூர் சி.ரகுபதி

"கிளம்பு. மனோஜ்குமாரை மனோதத்துவ ரீதியாய் அணுகுவோம்!"

"உறிப்னடைஸ் அல்லது மெஸ்மரைஸ் பண்ணப் போறியா?

"இல்லை. CATHARSIS பண்ணப் போகிறேன்!"

"அப்டின்னா?"

"எதிராளியின் மனதில் உள்ளதை எல்லாம் கொட்ட வைக்கும் ஒரு வகை மனோதத்துவக் கலை... எதிராளி மயக்க நிலையில் இருக்கமாட்டார். சாதாரணமாக இயல்பான நிலையில்தான் இருப்பார். 'மனசில இருக்றதெல்லாம் சொல்லி அழுது தீர்த்திட்டேன்'னு சொல்லுவாங்கல்ல அது மாதிரி!"

பெண்களுக்கு மார்புல"

"ஆட்டோகிராப்போடும்போது எதாவது அசம்பாவிதம்?"

"ஆயிரம் பேர் குழுமி நின்று ஆட்டோகிராப் கேட்டா மொத அம்பது பேருக்கு போட்டு குடுத்திட்டு கார்ல பறந்து போயிருக்கேன். ஆட்டோகிராப் கிடைக்காத 950 பேர் என் எதிரிகளா?"

"இம்... மேலமேல..."

"ஒருபொண்ணு ஆட்டோகிராப் வாங்கிட்டு நிங்க கைநாட்டா. கையெழுத்தான்னு தெரிஞ்சிக்க ஆட்டோகிராப் வாங்னேன்னு சொல்லுச்சு. அதோட விடாம உங்க கையெழுத்து கோழி கிறுக்ன மாதிரி இருக்கு. உங்க ஆட்டோகிராப்பை மெடிக்கல் ஷாப்ல குடுத்தா பத்துநோவால்ஜின் மாத்திரை கிடைக்கும்ன்னு வேற சொன்னாள்!"

"ஓ!"

"ஒரு ரசிகர் என் கையெழுத்தை

இருவரும் காரை எடுத்துக் கொண்டு மனோஜ்குமார் இருப்பிடத்துக்கு சீறிப் பாய்ந்தனர்.

"மனோஜ்குமார்! உங்க ஆட்டோகிராப் சம்பவங்களை எல்லாம் ஒண்ணு விடாம அசை போடுங்க!"

"அதில் அசைபோட என்ன இருக்கு? சிலருக்கு ரூபாய் நோட்ல போட்டுக் குடுத்திருக்கிறேன். சிலருக்கு உள்ளங்கைல சில

பாத்திட்டு உங்க கையெழுத்தை ஆராய்ஞ்சா இனி உங்களுக்கு மார்க்கட் எறங்க முகம்தான்னு தெரியுதுன்னான்!"

"எப்டி கண்டுபிடிச்சனு கேக்கவேண்டியதுதான?"

"கேட்டேன். ஹிட்லர் வீழ்ச்சியை ஹிட்லரின் கடைசிக் கால கையெழுத்துகளே முன்னறிவிப்பு செய்தன. அப்டித்தான் இதுவும்" என்றான்.

“வேற?”

“சில ரசிகர்கள் ஆட்டோகிராப் குடுத்த கைக்கு முத்தம் குடுத்திருக்கின்றனர். சில ரசிகர்கள் என்னை ஆர்வமிகுதியாய் கிள்ளி பார்த்திருக்கின்றனர். இதுவரை என்னிடம் பல லட்சக்கணக்கான ரசிகர் ரசிகைகள் ஆட்டோகிராப் வாங்கியிருக்கின்றனர். ஆனால் ஒரே ஒருவன் மட்டும்...”

“கமான் கமான்... மேல சொல்லுங்க!”

**ஆர்** எஸ் எம் பொறியியல் கல்லூரி.

ஆடிட்டோரியத்தில் குழுமியிருந்த மாணவமாணவியரிடம் உரை நிகழ்த்தி விட்டு வெளிவாசலுக்கு நடந்து வந்தான் மனோஜ்குமார்.

நூற்றுக்கணக்கானோர் கூடி ஆட்டோகிராப் வேட்டை நடத்தினர்.

கையெழுத்து போட்டவாறே தூரத்தே பார்வையை ஓட்டினான் மனோஜ். ஓட்டி வந்த காரை நிறுத்தி காரின் மேல் சாய்ந்து ஒற்றைக்காலில் நின்றிருந்தான் ஒரு இளைஞன்.

ஆட்டோகிராப் நோட்களை புறந்தள்ளியவாறே அவனிடம் நடந்தான் மனோஜ்.

“ஆர் யு எ ஸ்டுடன்ட்?”

“எஸ்.... எம் ஈ. பவர் சிஸ்டர் பைனல் இயர்!”

“எல்லாரும் என்கிட்ட ஆட்டோகிராப் வாங்கறாங்க. நீ வாங்கல!”

“வாங்கல!”

“ஏன்... சினிமா பார்க்கமாட்டியா?”

“நிறைய பார்ப்பேன்!”

“சினிமா நடிகர் நடிகைகளை பிடிக்காதா?”

“பிடிக்குமே!” பேன்ட் பாக்கட்டிலிருந்து ஆட்டோகிராப் நோட்டை எடுத்துப் புரட்டிக் காட்டினான். ரஜினி, கமல், விஜய், சிம்பு என எல்லாரிடமும் வாங்கியிருந்தான்.

“பின்னே ஏன்?”

“உங்களையும் பிடிக்காது உங்க படங்களையும் பிடிக்காது!”

“என்னை வெறுப்பேத்த சொல்றியா?”

“உண்மையை சொல்றேன். உலகத்ல பத்து லட்சம் நடிகர் நடிகையர் இருந்து அவர்களிடம் ஆட்டோகிராப் வாங்கும் வாய்ப்பு ஏற்பட்டால் உங்களை தவிர மீதி அனைவரிடமும் ஆட்டோகிராப் வாங்குவேன்”

“எங்க தலைவனை இப்டி பேசாதே!”

“டாய்! அவனை உதைங்கடா!”

“மவனே... இன்னைக்கி உனக்கு சங்குடா!”

குழுமியிருந்த ரசிகர்கள் அந்த இளைஞனை தாக்க முயன்றனர். செக்யூரிட்டிகள் புகுந்தனர். மனோஜ்குமாரை பத்திரமாக அப்புறப்படுத்தி காரில் சேர்த்தனர்.

காரில் ஏறி அமர்ந்த மனோஜ் அந்த இளைஞன் என்ன செய்கிறான் என எட்டினான்.

செக்யூரிட்டிகள் போட்டு அவனை துவைத்துக் கொண்டிருந்தனர்.

அவ்வளவு அடிகள் வாங்கிக் கொண்டும் அந்த இளைஞன் தனது நடுவிரலை அசிங்க சமிக்ஞை செய்து பாஸ்டர்ட் என்றான்.

கார் கடுகிப் பறந்தது.

– சொல்லி முடித்தான் மனோஜ்குமார்.

இரு கைகளை உயர்த்தி கூவினான் நிலா. “உறி இஸ் தி ரியல் கல்பிரிட்! அடுத்த 24 மணி நேரத்தில் அந்த இளைஞனை உயிருடனோ பிணமாகவோ பிடிப்பேன்!”

நிலாவின் கைவிரல்களில் பிஸ்டல் கழைக்கூத்தாடியது.

## 10

தாம்பரத்திலிருந்து பத்தாவது கிலோ மீட்டரில் அந்த பங்களா அமைந்திருந்தது. பங்களாவை சகல திசைகளிலும் காவல்துறை வாகனங்கள் சூழ்ந்தன. துப்பாக்கிகள் நீண்டன.

மெஹா போனில் காவல்துறை உயர் அதிகாரி கூவினார். “பங்களாவை போலீஸ் முற்றுகை யிட்டுள்ளது. பங்களாவுக்குள் யாரிருந்தாலும் சரணடையவும், சரணடைய அவகாசம் ஐந்தே நிமிடங்கள். சரணடைய மறுத்தால் சுடப்படுவீர்கள்!”

நிலாமகன் புல்லட் புரூப் ஜாக்கட் அணிந்திருந்தான். துப்பாக்கியுடன் பங்களாவுக்குள் புகுந்தான்.

ப்யூங்! ப்யூங்!

தோட்டாக்கள் நிலாவை உரசிச் சென்றன. பதிலுக்கு நிலா சுட ஆரம்பித்தான். ஏறக்குறைய ஒரு மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நீடித்தது.

தோட்டாக்கள் தீர்ந்த நிலையில் துப்பாக்கியை ஆராய்ந்து கொண்டிருக்கும் இளைஞனை நிலா நெருங்கி "ஹாண்ட்ஸ் அப்!" என்றான்.

கைகளை உயர்த்த மறுத்த இளைஞனின் துப்பாக்கி கையை சுட்டான் நிலா. இரத்தம் கொட்டியது. இளைஞன் துள்ளத்துடித்தான்.

துப்பாக்கியை இளைஞனின் இருபுருவங்களுக்கிடையே நிறுத்தினான் நிலா.

"நீதான நடிகர் மனோஜ்குமாரை சகலவிதங்களிலும் நசுக்க துடித்தது?"

"ஆம்!"

## யோசனை

**சு**ண்ணாம்பில் சிறிது தேங்காய் தண்ணீர் விட்டு வைத்தால் இறுகிப் போகாமல் எப்போழுதும் இளகிய பதத்திலேயே உபயோகிக்க ஏதுவாக இருக்கும்.

**தி**ருமண விசேஷ நாள்களில் பந்தியில் இலையின் கீழ் ஒரு சிறு கவர் வைத்தால் சாப்பிட முடியாதவர்கள் ஸ்வீட், வாழைப்பழம் போன்றவற்றை வீணாக்காமல் எடுத்து வைத்துக் கொள்வார்கள்.

- ஹரிஹரன், திருவனந்தபுரம்

ஒரு என்ஆர்.ஐ. ஒரு மில்லியனரும் கூட... நீ சர்வதேச அளவில் சினிமா படங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறதாய். உன்னை சுருக்கமாக வர்ணிக்க வேண்டுமானால் நீ ஒரு சர்வதேச சினிமா அகராதி!"

"கரக்ட்!"

"இப்பச் சொல்லு நடிகர் மனோஜ்குமாரின் மீது உனக்கு என்ன கோபம்?"

"உன் உண்மையான பெயர் என்ன?"

"நீ க்ளூ குடுத்த வார்த்தை 'ஆட்டோகிராப்... அதனை வைத்து மனோஜ்குமாரை கேத்தார்சிஸ் பண்ணினேன். கல்லூரி விழாவில் உனக்கும் அவருக்கும் நடந்த வினோத வாக்குவாதத்தை கூறினார் மனோஜ். தொடர்ந்து கல்லூரி நிர்வாகத்தை விசாரித்து உன்னை பற்றிய விபரங்களை சேகரித்தேன். உன்னுடைய தந்தை

சிரித்தான் அமுதவாணன். "எனது ஒண்ணுவிட்ட சித்தப்பா மனோஜ்குமாரின் சாயலில் இருப்பார். அவர் என் தந்தையின் பலகோடி ரூபாய்பணத்தை ஏமாற்றி விட்டார். மனோஜ்குமாரை பார்க்கும்போதெல்லாம் என் மோசடிக்கார சித்தப்பாதான் ஞாபகத்துக்கு வருவார். மனோஜ்கு மாரின் குரலை மிக ஒத்திருக்கும் என் மேனிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவரின் குரல். அவர்

எப்ப பார்த்தாலும் நீ உருப்பட மாட்ட.... உருப்பட மாட்ட–ன்னு என்னை சபிச்சிக்கிட்டே இருப்பார். அதனால் மனோஜின் குரலைக் கேட்கும் போதெல்லாம் எனக்கு பிடிக்காத ஆசிரியர் நினைவுக்கு வந்து தொலைப்பார். இன்னொரு மிகமிக முக்கியமான விஷயம் – மனோஜ்குமாரின் நடிப்பு எனக்கு அறவே பிடிக்காது"

"மனோஜ்குமார் நடிப்பை பிடிக்காவிட்டால் அவரின் படங்களை பார்க்காமல் கௌரவமா ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான?"

"என்னால முடிய. ஒரு சைக்கியாட்ரிஸ்ட் கிட்ட போய் என் பிரச்னையை சொன்னேன். சிலருக்கு சில ஊர் பெயர்கள் பிடிக்காது. சிலருக்கு சில ஆண் பெண்களின் பெயர் பிடிக்காது. சிலருக்கு சில மிருகங்களோ பறவைகளோ பிடிக்காது. அதற்கு தகுந்த காரணங்கள் இருக்கலாம். இருக்காமலும் போகலாம். உனக்கு வந்திருக்கும் மனவியாதியின் பெயர் 'மனோஜ்குமார் போபியா' என்றார். இதை எப்படி சரி பண்ணலாம் என கேட்டேன். மருந்துகள் எழுதிக்கொடுத்து தொடர்ந்து கவுன்ஸலிங்கும் பண்ணினார். ஒரு கட்டத்தில் எனக்கு மனநல மருத்துவர் மீது வெறி கிளர்ந்தது. அவரை மனோஜ்குமார் ஆதரவாளர் என சந்தேகித்தேன். அவரைக் கொன்றேன். அதன்பின் மனோஜ்குமாரை ஒழித்துக்கட்டும் முழு நேர பணியில் இறங்கினேன்!"

"இது தப்பில்லையா?"

"தப்புதான். என்ன பண்ண? என் ஆழ்மனம் நொடிக்கு நொடி மனோஜ்குமாரை நிம்மதியா விடாதே என்கிறதே"

"மனோஜ்குமார் என்ன பண்ணினால் நிம்மதியாவாய்?"

"தெரியவில்லையே..."

"சினிமா நடிப்பு துறையிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்தால்?"

எனது 'மனோஜ்குமார் போபியா' அப்போதும் குறையாது என நம்புகிறேன்!"

நிலாமகன் தனது நீள்மூழ்க்கை நீவிவிட்டுக் கொண்டான். பெரிதாய் மூச்சுவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"உனக்கு தூக்குத்தண்டனை அல்லது இரட்டை ஆயுள்தண்டனை கிடைக்கும்!"

"பரவாயில்லை. தூக்குதண்டனை கிடைத்தால் 'மனோஜ்குமார் ஒழிக!" என கோஷமிட்டு இறப்பேன். ஆயுள் தண்டனை கிடைக்காதல் சிறையிலிருந்து தப்பித்து மனோஜ்குமாருக்கு பல தொந்திரவுகள் கொடுக்க

திட்டமிடுவேன்"

"அப்போதும் நீ திருந்தமாட்டாய்!"

"மனோஜ்குமாரின் மீது டன் கணக்கில் வெறுப்பை உமிழவே கடவுள் என்னை படைத்துள்ளான். போன பிறவியின் விட்டகுறை தொட்டகுறையோ என்னவோ? போன பிறவியில் மனோஜ்குமாருக்கு 'அமுதவாணன் போபியா' இருந்திருந்து அவன் என் கண்ணில் விரலை விட்டு ஆட்டினாலும் ஆட்டியிருந்திருப்பான்! யார் கண்டது?"

ராபிட் ஆக்ஷன் போர்ஸ் புகுந்தது.

அமுதவாணன் கைது செய்யப்பட்டான்.

"எதாவது எனக்கு சொல்ல விரும்புறீங்களா நிலாமகன்?"

"இம்!"

"சொல்லுங்க... என்னிரு காதுகளும் உங்கள் வசம்!"

"ப்ராங்கா சொல்லனும்னா அமுதவாணன் எனக்கும் மனோஜ்குமார் நடிப்பு பிடிக்காது. ஆனா நான் மனநோயாளி ஆகவில்லை பார்... விருப்பு வெறுப்பை ஒரு கட்டுக்குள் வைத்திருப்பது மனிதருக்கும் ஏன் ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கும் நல்லது!.... இறைவன் நமக்கு இரண்டு வழிகளை பரிசளித்துள்ளான். ஒருவழி – வெறுப்பும் பழியுணர்வும். மற்றொரு வழி – அன்பும் சகிப்புணர்ச்சியும். நாம் இரண்டாவது வழியை தேர்ந்தெடுத்து வாழ்க்கை பயணத்தை தொடர்வோமாக!"

"டெரி பிக் நிலா. இந்த அட்வைஸ் எனக்கு உதவுதோ இல்லையோ – லட்சக்கணக்கான வாசகருக்கு உதவும். ஒரு விண்ணப்பம்!"

"என்ன?"

"என்னுடைய ஆட்டோகிராப் நோட்டில் ஜாக்கிசானிலிருந்து ஜியார்ஜ் குளுனி வரை கையெழுத்திட்டு உள்ளனர். நீங்க என் நோட்டில் ஆட்டோகிராப் இட்டுத்தர வேண்டும்!"

"ஏன் என் மீது விசேஷ அபிமானம்?"

ஆட்டோகிராப் நோட்டை வாங்கி மற்ற கையெழுத்துகளை ஒரு நோட்டம் விட்டு 'அன்பே சிவம்' என எழுதி கையெழுத்திட்டான் நிலாமகன்.

"உங்களை பார்த்த நாளிலிருந்து எனக்கு 'நிலாமகன் மேனியா'–" என்றான் அமுதவாணன்.

**(முற்றும்)**